மலர் 7 • இதழ் 10 • பிப்ரவரி 2023 • ரூ.20/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி



## சுறுசுறுப்பாகப் படிக்க சூப்பர் வழிகள்!

## எழுதிப் பழகுவது மறக்கக் கூடாது!

## கல்வி இழப்பை ஈடு செய்வோம்!


மரம் வளர்ப்போம்
மழை பெறுவோம்
சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்
சக்தி
மசாலா
சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com
• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






## COURSES AVAILABLE

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

# SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344



# கல்வி இழப்பை ஈடு செய்வோம்!

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.** இந்தியாவில் பள்ளிக்கல்விச் சூழலை ஆய்வு செய்து ப்ரதம் பவுண்டேஷன் சார்பில் வெளியிடப்படும் 2022–ம் ஆண்டுக்கான வருடாந்திரக் கல்வி நிலை அறிக்கை (ASER அறிக்கை) சமீபத்தில் வெளியாகியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுமக்கள் உதவியுடன் நடத்தப்படும் இந்த ஆய்வு, கடந்த 2020–ல் கொரோனா காரணமாக நடத்தப்படவில்லை. 2021–ம் ஆண்டில் மூன்று மாநிலங்களை மட்டும் ஆய்வு செய்து ஓர் இடைக்கால அறிக்கையை மட்டும் வெளியிட்டார்கள். 2018–ம் ஆண்டுக்குப் பிறகு முழுமையான அறிக்கை இப்போதுதான் வெளியாகி இருக்கிறது. இந்தியாவின் 616 மாவட்டங்களில் 19 ஆயிரம் கிராமங்களுக்குச் சென்று ஏழு லட்சம் பள்ளிக் குழந்தைகளைச் சந்தித்து எடுக்கப்பட்ட இந்த ஆய்வு, நம் பள்ளிச்சூழலை உணர்த்தும் கண்ணாடி.

கொரோனா கால நெருக்கடிகளைத் தாண்டிப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்கும் விகிதம் அதிகரித்திருக்கிறது, குறிப்பாக அரசுப் பள்ளிகளில் குழந்தைகளைத் தேடிவந்து சேர்ப்பதும் அதிகரித்துள்ளது என்று குறிப்பிடும் இந்த அறிக்கை, கொரோனா காலக்கட்டம் மாபெரும் கல்வி இழப்பை ஏற்படுத்தி இருப்பதாகக் கவலைப்படுகிறது. குறிப்பாகப் பாடப்புத்தகத்தைப் பார்த்துப் படிக்கும் திறன், கடந்த 2012–ம் ஆண்டு இருந்த நிலைக்குக் குறைந்துவிட்டது என்கிறது இந்த அறிக்கை.

தாய்மொழியில் ஒன்றாம் வகுப்புக் குழந்தைகூடப் படிக்க முடிகிற எளிய வார்த்தைகள் அடங்கிய சில வரிகள், இரண்டாம் வகுப்புக் குழந்தை புரிந்துகொண்டு படிக்க முடிகிற ஒரு கதை ஆகியவற்றைக் கொடுத்துப் படிக்கச் சொல்வார்கள். 5 முதல் 16 வயது வரை இருக்கும் குழந்தைகளுக்கு இந்தத் தேர்வு நடத்தப்படும். ஐந்தாம் வகுப்பு படிக்கும் குழந்தைகளில் 42.8% பேர் மட்டுமே இந்தக் கதையை எழுத்துக் கூட்டிப் படிக்கிறார்கள். மூன்றாம் வகுப்பு மாணவர்களிடம் போனால், இது வெறும் 20.5% ஆகக் குறைந்துவிடுகிறது.



கணித அறிவு தொடர்பான சோதனையிலும் இதே நிலைதான். 1 முதல் 99 வரையுள்ள எண்களைக் குழந்தைகள் சரியாக அடையாளம் காண்கிறார்களா, இரட்டை இலக்க எண்களைக் கொண்டு கடன் வாங்கிக் கழிக்கும் கணக்கை அவர்களால் போட முடிகிறதா, மூன்று இலக்க எண் ஒன்றை ஒற்றை இலக்க எண்ணால் வகுக்க முடிகிறதா என்றெல்லாம் தேர்வு வைக்கப்பட்டது. இந்தத் திறனும் நான்கு ஆண்டுகளில் கணிசமாகக் குறைந்திருக்கிறது.

இதேபோல ஆங்கில அறிவும் சோதிக்கப்பட்டது. கேப்பிட்டல் லெட்டர், ஸ்மால் லெட்டர் ஆகியவற்றை அடையாளம் காணச் சொல்வது, எளிமையான மூன்றெழுத்து வார்த்தைகளைப் படிக்கச் சொல்வது, சில வார்த்தைகள் அடங்கிய வாக்கியத்தைப் படிக்கச் சொல்வது எனச் சோதனைகள் நடத்துவார்கள். இதிலும் குழந்தைகள் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னால் போயிருக்கிறார்கள்.

குறிப்பாகத் தமிழகத்தின் நிலைமையும் கவலை தருவதாகவே இருக்கிறது. 2022–ம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தமிழகத்தின் 31 மாவட்டங்களில் 920 கிராமங்களைச் சேர்ந்த 3–16 வயதுக்குட்பட்ட 30,737 மாணவர்கள் இந்த ஆய்வில் பங்கேற்றனர். எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களில் 37% பேரால், இரண்டாம் வகுப்புக் குழந்தைகளுக்கான தமிழ்க் கதையைக்கூடப் படிக்க இயலவில்லை என்பது வேதனையானது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இது அதிக அளவு. கணித அறிவு, ஆங்கில அறிவு ஆகியவையும் வீழ்ச்சி கண்டுள்ளன.

கொரோனா ஏற்படுத்திய பல்வேறு இழப்புகளிலிருந்து நாம் படிப்படியாக மீண்டு வருகிறோம். புதிய இயல்பு நிலைக்குத் திரும்பிவிட்டதாக நம்புகிறோம். ஆனால், கல்விச்சூழலில் கொரோனா ஏற்படுத்திய இழப்புகளைச் சரிசெய்வதற்கு இன்னமும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது தெரியவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் கொரோனா காலக்கட்டத்தில் நடைபெற்ற ஆன்லைன் வகுப்புகள் மாணவர்களின் கற்றலை வெகுவாகப் பாதித்துள்ளதாகத் தெரிகிறது. மாணவர்களின் பின்னடைவைப் புரிந்துகொண்ட சில பெற்றோர்கள், அவர்களை டியூஷன் சேர்த்திருக்கிறார்கள். கொரோனாவுக்குப் பிறகு டியூஷன் சேர்க்கை கணிசமாக அதிகரித்துள்ளதையும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இந்த வாய்ப்புக் கிடைக்காத எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குப் பள்ளியே அதைக் கொடுத்தாக வேண்டும்.

கொரோனா தொற்றுக்காலத்தில் மருத்துவர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிபுரிந்து மக்களைக் காத்தது போல, ஆசிரியர் சமூகம் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி நம் பிள்ளைகளின் கல்வியைக் காக்க வேண்டிய தருணம் இது. சமூகமும் அவர்களுக்குத் தோள்கொடுத்து கல்வி இழப்பை ஈடுசெய்ய வேண்டும்.

அன்புடன்,

**சூர்யா**

நிறுவனர் – அகரம் பவுண்டேஷன்


**யாதும்**

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 7 • இதழ் 10

பிப்ரவரி 2023

கௌரவ ஆசிரியர்

**திரு. சூர்யா**

பதிப்பாளர் – ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜு தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com



# பத்து மந்திரங்களைப் பற்றிக் கொள்ளுங்கள்!

இன்றைய இளைஞர்கள், போட்டிகளை எதிர்கொள்ளும் அளவுக்குத் தங்களது திறமையை வளர்த்துக்கொள்கின்றனர். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது, இவர்கள் டெக்னிக்கலாகத் தங்களை வளர்த்துக்கொள்ளவும் பெரிய அளவில் உதவுகிறது. வேலைக்கு எடுக்கும் நிறுவனங்கள், வெறுமனே பணியாளர்களின் திறன்களை மட்டுமே பார்ப்பதில்லை. அவர்கள் நிறுவனத்தில் பலவிதமான பணியாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தேவையான குணங்களையும் கொண்டுள்ளனரா என்று பார்க்கின்றனர். ‘‘உங்களது குணங்கள் நடத்தையில் வெளிப்படும். இந்த நடத்தைப் பலருடனும் உங்களுக்குத் தொடர்பினை ஏற்படுத்தும். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் உயர்வதற்கு இந்தக் குணங்களே உங்களுக்கு உதவும்’’ என்கிறார் ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர் நஞ்சுண்டேஸ்வரன்.

எந்த வேலைக்கும் உங்களைப் பொருத்தமானவராக மாற்றுவதற்கு அவர் தரும் பத்து மந்திரங்களைப் பற்றிக்கொள்ளுங்கள்!

**ஆர்வம்:** எந்த நிறுவனத்திலும் நீங்கள் வேலைக்குச் சேரலாம். அந்த வேலையை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டு செய்ய வேண்டும். நிறுவனத்தின் விதிகளை முறையாகப் பின்பற்றுவதிலும் உங்களது ஆர்வம் பிரதிபலிக்க வேண்டும். விதிகளைப் பின்பற்ற சலித்துக்கொள்பவர்களை நிறுவனங்கள் விரும்புவதில்லை. குறிப்பிட்ட இலக்கை அடைய அர்ப்பணிப்புடன் இயங்குவது, புதிய சவால்களை அடைய தனது அறிவை வளர்த்துக்கொள்வது, வலிமையான நம்பிக்கை சார்ந்த உறவுகளை உருவாக்கும் தன்மை ஆகியவை இன்றைய நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளாக உள்ளன.

**பணி நெறிமுறை:** மேலதிகாரிகள் பார்க்கும்போது மட்டுமே சிலர் பொறுப்பாக வேலை செய்வார்கள். மற்ற நேரங்களில் அலட்சியமாக இருப்பார்கள். இவர்களை நிறுவனங்கள் விரும்பாது. வயது, அனுபவம், திறமை ஆகியவற்றைத் தாண்டி, பணி நெறிமுறைகளே ஒருவருக்கு நல்ல அடையாளம் தரும். இயல்பிலேயே சிறந்த பணியாளர்கள் மற்றவர்கள் பொறாமைப்படும் அளவுக்கு நெறியுடன் பணிகளைச் செய்வார்கள். சரியான நேரத்தில் வேலையை முடிப்பார்கள். நம்பி பொறுப்புகளைக் கொடுக்கும் அளவுக்கு நேர்த்தி காட்டுவார்கள். நிறுவனங்கள் பாராட்டி ஊக்கப்படுத்தும் அளவுக்குக் கூடுதல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவார்கள்.



ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர்
**எஸ்.நஞ்சுண்டேஸ்வரன்**

இப்படிப்பட்டவர்களைக் கண்காணிக்க குறைந்த அளவு நிர்வாகம் மட்டுமே தேவைப்படும். அனைத்துப் படிநிலைகளிலும் பணி நெறிமுறைகளைச் சரியாகப் பின்பற்றும்போது வேலைகள் எளிதில் முடியும்.




**நேர்மை:** பணிச்சூழலைச் சீர்குலைக்காமல் தங்களது கருத்துகள், யோசனைகள் மற்றும் ஏமாற்றங்களை நேர்மையான ஊழியர்கள் வெளிப்படுத்துவார்கள். இவர்களிடமே நிறுவனங்கள் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைக்கின்றன. சில நேரங்களில் அதிக பொறுப்புகளை அளிக்கும்போதும் இவர்கள் சோர்வின்றிப் பணியாற்றுகின்றனர். நிறுவனத்தின் எந்த இடத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், அவர்கள் அந்த இடத்துக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராக உள்ளனர். நேர்மையான ஊழியர்கள் அந்த நிறுவனத்தின் நலம் விரும்பியாகக் கொண்டாடப்படுகின்றனர்.

**நம்பிக்கை:** தன்னிடம் ஒரு பணியை ஒப்படைத்தால் அதைக் கண்டிப்பாக முடித்துவிடுவார் என்ற நம்பிக்கையை ஒருவர் ஏற்படுத்த வேண்டும். இன்றைய சூழலில் ஒரு நிறுவனத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் மட்டுமே நம்பிக்கைக்கு உரியவர்களாக உள்ளனர். இவர்களால் முதலாளிகள் பயனடைகின்றனர். நிதி நிர்வாகம் செய்யவும், வாடிக்கையாளர்களைத் தொடர்புகொள்ளவும் நம்பிக்கையான ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். மற்ற ஊழியர்களுக்கு இவர்கள் சிறந்த முன்மாதிரியாக உருவாகின்றனர். உடன் வேலை செய்பவர்களையும் ஊக்குவித்து திறம்படப் பணியாற்ற வைக்கின்றனர்.

**லட்சியம்:** சம்பளத்துக்காக மட்டுமே வேலை பார்ப்பவர்கள் உயர முடியாது. இவர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளாமல் ஒரே நிலையிலேயே இருப்பார்கள். பெரும்பாலும் ஏதாவது குறை கூறிக்கொண்டே இருப்பார்கள். ஆனால் லட்சியத்துடன் பணியாற்றுபவர்கள், தங்களைச் சுற்றியுள்ள குறைகளைக் கண்டுகொள்ளாமல் தன்னை மேம்படுத்திக்கொள்வதில் கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் வேலை செய்யும் இடத்தில் புதுமைகளை அறிமுகம் செய்வது, வித்தியாசமாக யோசிப்பது என அக்கறை காட்டுகின்றனர். இதுபோன்ற ஊழியர்களையே நிறுவனங்கள் தக்கவைத்துக்கொள்ள விரும்புகின்றன. நிறுவனத்தின் வளர்ச்சியில் இவர்களின் பங்கு முக்கியமானது.

**டீம் லீடர்:** வணிகத்தை மேம்பட வைப்பதில், குழுச் செயல்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஊழியர்கள் அந்தக் குழுவுக்குள் வேலைகளைப் பகிர்ந்துகொள்ளும்போது, அவரவர் வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டியது அவசியம். சிறந்த அணித்தலைவரே குழுவை வெற்றிகரமாக இயங்க வைப்பார். எல்லோருடனும் இணக்கமாக இயங்க முடியாதவர்கள் குழுவின் தலைவராக முடியாது. தன்னையும் உயர்த்திக்கொண்டு, தன்னைச் சார்ந்துள்ள ஊழியர்களையும் திறம்படப் பணியாற்ற வைப்பதில் கவனம் செலுத்துபவர்கள் சிறந்த டீம் லீடர்கள். தலைமைப் பண்புகளை மேம்படுத்திக்கொள்வது, நிறுவனத்தில் உங்கள் இடத்தை உறுதிப்படுத்தும்.

**விமர்சன சிந்தனையாளர்:** எந்த விஷயத்தையும் விமர்சன ரீதியாகச் சிந்திப்பவர்கள், சிக்கல்களைத் தர்க்கரீதியாக அணுகி அதற்கான தீர்வைக் காண்கின்றனர். இவர்கள் ஒரு பிரச்னையைப் பலவிதமான கண்ணோட்டங்களில் பார்க்கின்றனர். அதன் சாதக, பாதகங்களைப் பலவிதமாக யோசித்துப் பார்த்து, சிறந்த தீர்வைத் தேர்வு செய்கின்றனர். இவர்களே நெருக்கடியான நேரங்களில் முடிவெடுக்க உதவுகின்றனர். வணிகத்தின் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காண இவர்கள் உதவுகின்றனர்.

**செயல்திறன்:** பேசுவதைவிடச் செயல்படுவது முக்கியம். முன்முயற்சிகள் மற்றும் தலைமைத்துவப் பண்பு உள்ளவர்கள், திட்டமிட்டுச் செயல்படுவதுடன் தங்களது செயல்திறனை மேம்படுத்திக்கொள்வதிலும் ஆர்வமாக உள்ளனர். இவர்களால்தான் நிறுவனங்கள் அடுத்தக்கட்ட வளர்ச்சி காண்கின்றன.

**தகவல்தொடர்புத் திறன்:** சிறந்த ஊழியரின் முக்கியமான குணங்களில் ஒன்றாகத் தகவல் தொடர்புத் திறன் உள்ளது. நிறுவனத்தின் மேலாளர், குழு உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளருடன் திறம்படத் தொடர்புகொள்பவர்கள், நிறுவனம் சிறப்பாக இயங்க உதவுகின்றனர். மேலதிகாரி சொல்வதில் எதையெல்லாம் ஊழியர்களுக்குச் சொல்ல வேண்டும், வாடிக்கையாளர்களை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் வளர்த்துக்கொள்வது அவசியம்.

**பொறுப்புணர்வு:** தனது பணி, செயல்கள் மற்றும் முடிவுகளுக்குப் பொறுப்பேற்பவர்களை நம்பகத்தன்மையுடன் நிறுவனங்கள் அணுகுகின்றன. இவர்கள் சிறந்த ஊழியர்களை உருவாக்குகின்றனர். இந்த நம்பகத்தன்மையால் அவர்கள் லட்சிய ஊழியர்களாகக் கொண்டாடப்படுகின்றனர். இது போன்ற திறன்களை வளர்த்துக்கொள்வதன் மூலம் நீங்கள் எந்த நிறுவனத்திலும் மதிப்புமிக்க பயணத்தைத் தொடர முடியும்.

**– யாழ் ஸ்ரீதேவி**



## கதவைத் திற...

# வெளியே கொஞ்சம் நட!

1970–களின் தொடக்கத்தில் இந்தியா கண்ட இயக்கங்களில் மிக முக்கியமானது, சிப்கோ இயக்கம். 'சிப்கோ' என்றால் 'தழுவு' என்பது பொருள். மரங்களை வெட்ட வந்தபோது, அவற்றைக் கட்டித் தழுவிக் காத்தது சிப்கோ இயக்கம். 'எங்களை வெட்டுங்கள், மரத்தை வெட்டாதீர்கள்' என்பது அன்றெழுந்த குரல். இமயமலைக் காடுகளில் ஒலித்த குரல்.

குழந்தைகளைத் தழுவுவது போல் மரங்களைத் தழுவிக் காத்தவர்கள் பெண்கள். சிப்கோ என்பது சுற்றுச்சூழல் இயக்கம் மட்டுமல்ல, அது பெண்கள் இயக்கம். காடுகளை வியாபாரக் கம்பெனிகளுக்குத் தாரை வார்த்தபோது பெண்கள் கேட்ட கேள்வி இது, 'காடுகள் எதற்கு? வாழ்வதற்கா? வர்த்தகம் செய்யவா?'

சிப்கோ இயக்கத்தைத் (அன்றைய உத்தரப் பிரதேசம், இன்றைய உத்தரகாண்ட்) தொடங்கியவர் சுந்தர்லால் பகுகுணா என்னும் காந்தியவாதி. இமயமலையை ஒட்டிய கிராமங்கள் முழுவதும் நடந்தவர். 'சுற்றுச்சூழல்தான் தேசத்தின் பொருளாதாரம்' என்ற முழக்கத்தைத் தந்தவர். தமக்களித்த பத்மஸ்ரீ விருதையும் பெற மறுத்தவர். அன்றைய பிரதமர் இந்திரா காந்தியுடன் பேசி இமயமலைக் காடுகளில் மரங்களை வெட்ட 15 ஆண்டுகளுக்குத் தடைச் சட்டம் கொண்டுவரக் காரணமாக இருந்தவர்.

ஒரு சம்பவத்தை உலகமே வியந்து கவனித்தது. இமயமலை கிராமம் ஒன்றில் வர்த்தகக் கம்பெனி மரம் வெட்ட வந்தபோது, ஆதிவாசிப் பெண் கௌரா தேவி தலைமையில் பெண்கள் கூடி மரத்தைக் கட்டித் தழுவினர். மரத்தைத் தழுவிய பெண்கள் அன்று பாடிய பாட்டு இன்றும் கேட்கிறது... 'காடு எங்கள் தாய்வீடு... பாதுகாப்போம் எங்கள் பலம் கொண்ட மட்டும்!'

இன்று சிப்கோ இயக்கம் பற்றித் தெரிந்தோர் குறைவு. மரங்களைக் கட்டித் தழுவிய கைகளையும் பலர் அறியார். இயக்கங்களின் தீவிரம் காலப்போக்கில் தேய்ந்து போகலாம். சிலரின் ஆசைகள் பலரின் தேவைகளை முந்தலாம். அரசும் அந்த ஆசைகளின் பக்கம் நிற்கலாம். ஆனால் மக்கள் இயக்கங்கள், குறிப்பாகப் பெண்கள் கையில் எடுத்த இயக்கங்கள் ஒருபோதும் சுருண்டு படுத்து விடுவதில்லை. வரலாறு ஞாபகப்படுத்தும் உண்மை இது.

1730–ல் தோன்றியது, கட்டித் தழுவி மரங்களைப் பாதுகாக்கும் இயக்கம். அன்றும் அது பெண்களின் இயக்கம். இயக்கத்தை வழிநடத்தியவர், அம்ரிதா தேவி. மரத்தை வெட்ட வந்த இந்தூர் மகாராஜாவின் சிப்பாய்கள் மரத்தைத் தழுவிய பெண்களின் தலைகளைத் துண்டித்துவிட்டு, பிறகு மரங்களைத் துண்டித்தனர். 1730–ல் துண்டிக்கப்பட்ட தலைகள்

**பேராசிரியர் ச.மாடசாமி**





1970–களில் சிப்கோ இயக்கத்தின் விதைகள் ஆயின. விதைகள் முளைக்கும்... மீண்டும் மீண்டும்!

இது இன்டர்நெட் காலம். இயற்கையை, இயற்கையின் அதிசயங்களை, இன்டர்நெட் விழுங்கி நிற்கும் காலம். நடந்த, ஓடிய காலங்கள் முடிந்துவிட்டன. இது உட்கார்ந்து விட்ட தலைமுறை. Sedentary society! நாற்காலிகளும் சோபாக்களுமே வீட்டில் பிரதானம். உட்கார்ந்துதானே டி.வி., பார்க்க முடியும், கம்ப்யூட்டர் பார்க்க முடியும், செல்போன் பார்க்க முடியும்! இயற்கைக்கு எதிர்திசையில் வாழ்க்கை நகர்கிறது. இது இழப்புதான். குழந்தைகளுக்கும் அவர்களின் கற்பனைக்கும் பேரிழப்பு.

இந்த இழப்பை ஞாபகப்படுத்திப் பல புத்தகங்கள் வந்துவிட்டன. அவற்றில் ஒன்று, 'Last Child in the Woods'. '1950–களில் யாரும் அமில மழை பற்றிப் பேசவில்லை, ஓஸோனில் விழுந்த ஓட்டைகள் பற்றிப் பேசவில்லை, புவி வெப்பமயமாதல் குறித்துப் பேசவில்லை' என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தித் தொடங்குகிறது புத்தகம். இன்று இவை குறித்துத்தான் நிற்காத பேச்சு, ஓயாத கவலை.

அறிவில் ஒரு வகை, இயற்கை மீதான அறிவு. Naturalist intelligence என்று புத்தகம் குறிப்பிடும் அறிவு. உதாரணமாக, எது விஷமுள்ள பாம்பு, எது விஷமற்ற பாம்பு என்று பிரித்தறிவது இயற்கை அறிவு. இன்று இயற்கையின் மணம், குணம், வகை குறித்து யாருக்கு என்ன கவலை? கார்களின் வகை, ஷூக்களின் ரகம், நகைகளின் விலை குறித்துக் கேட்டுப் பாருங்கள். பதில் சொல்ல ஒருவரை ஒருவர் முந்துவார்கள்.




இயற்கைக்கும் குழந்தைகளின் படைப்பாற்றலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக நூலாசிரியர் Richard Louv கருதுகிறார். Nature inspires creativity in a child என்பது அவர் கருத்து. தன் கருத்தை உறுதிப்படுத்த பல பரிசோதனை முயற்சிகளை முன்வைக்கிறார் ஆசிரியர். அவற்றில் ஒன்று loose–parts பரிசோதனை. சம்பந்தமற்ற, விதவிதமான பொருள்களைக் குழந்தைகளிடம் கொடுத்துப் பாருங்கள். அவற்றைக் கொண்டு அவர்கள் வடிவமைத்து உருவாக்கும் பொருள்களில் அவர்களின் படைப்பாற்றல் வெளிப்படக் காண்பீர்கள் என்கிறது loose–parts விளையாட்டு. விதவிதமான பொருள்கள் நிறைந்து கிடக்கின்றன இயற்கையில், பறவை உதிர்த்த இறகு முதல் பாம்பு உரித்துப் போட்ட சட்டை வரை.

'வீட்டை விட்டு வெளியே வா! இயற்கையை நோக்கி நட!' என்று பிள்ளைகளை அழைக்கிறது Last Child in the Woods புத்தகம்.

'டோட்டோ சான்' என்ற அற்புதமான கல்வி நூல் தமிழில் 'சன்னலில் ஒரு சிறுமி' என்ற பெயரில் வந்தது. பாடம் நடக்கும்போதும், சன்னல் வழியே வீதியைப் பார்த்த சிறுமி அவள். வித்தியாசமான பள்ளி; துடிப்பான சிறுமி!

இன்று குழந்தைகள் சன்னல் பக்கம் வருவதே இல்லை, வீதியைப் பார்ப்பதும் இல்லை. தங்கள் வீடுகளிலும் தாங்கள் போன வீடுகளிலும் இப்போது பிள்ளைகள் அடிக்கடி நாடுவது எதை என்று ஒரு வேடிக்கையான ஆய்வு நடந்தது. விடை, அவர்கள் அதிகம் நாடுவது தங்கள் உபகரணங்களை சார்ஜ் செய்வதற்கான பிளக் பாயின்டுகளை (electrical outlets)!

பிள்ளைகளை இப்படி வீடுகளுக்குள் அடைத்ததில் பெற்றோர்க்கு பங்கில்லையா? நிச்சயம் இருக்கிறது! மெரினா கடற்கரைக்குப் போனபோதெல்லாம் பார்த்திருக்கிறேன். குழந்தைகள் கடல் தண்ணீரில் கால் நனைத்து விளையாடுவார்கள். 'ஹாய்... ஹூய்...' என்று கூச்சலிட்டு விளையாடுவார்கள். 'நேரமாச்சு... போகலாம்' என்று பெற்றோர் அழைத்தபடி இருப்பார்கள். ஆனால், தண்ணீரில் ஆடும் குழந்தைகளைப் பிரிப்பது அத்தனை எளிதா?

வாய்ப்பு கிடைத்தால் பிள்ளைகள் இயற்கையை ஆனந்தமாகக் கட்டித் தழுவுவார்கள் நிச்சயமாய்!

**(தொடர்ந்து பேசுவோம்...)**

# குழந்தைகளோடு உரையாடுங்கள்!



இன்றைய அவசர யுகத்தில் குழந்தைகளோடு அமர்ந்து பேச நமக்கு ஆர்வமும் நேரமும் இருப்பதில்லை. அவர்களுக்கும் நம்மிடம் பேச பெரிய ஆர்வம் இருப்பதில்லை. ஆனால் நமக்கோ, நம் பிள்ளைகளிடம் சொல்வதற்கு ஏகப்பட்ட அறிவுரைகளும் வாழ்க்கைமுறைகளும் இருக்கின்றன. அவற்றை எப்படி அவர்களிடம் கொண்டு சேர்ப்பது?

அதற்கோர் எளிய வழி இருக்கிறது. வாக்கிங் கூட்டிச் செல்லுங்கள். வாக்கிங் என்றால் பூங்காவில் நடை பயிலும் வாக்கிங் இல்லை. ஷாப்பிங்குடன் கூடிய வாக்கிங். ஒரு விடுமுறை நாளில், வாகனங்களைத் தவிர்த்துவிட்டுப் பிள்ளைகளைப் பொருட்கள் வாங்க வாக்கிங் அழைத்துச் செல்லுங்கள். செய்தித்தாள் வாங்கிவிட்டு, பால் வாங்கிக்கொண்டு, காய்கறி மற்றும் பழங்கள் வாங்கிவிட்டு, ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோரில் மளிகை வாங்கிவிட்டு, ஒரு கரும்புச்சாறு குடித்துவிட்டு வாருங்கள்.

நடந்து செல்லும்போது நீங்களும் உங்கள் பிள்ளையும் மட்டும் இருப்பதால், ஒருவருக்கொருவர் பேசியே ஆகவேண்டும். பேசும்போது இருவரும் தங்கள் மனதில் இருக்கும் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும்போது நீங்கள் சொல்ல வேண்டிய அறிவுரைகளை நாசூக்காகச் சொல்லிவிடலாம்.

பல கடைகளுக்குச் செல்லும்போது பில் போடுபவர்கள், கடைக்காரர்கள், கடைக்கு வருபவர்கள் என்று பலரைப் பார்க்கிறோம். அவர்களைப் பற்றி உங்கள் கருத்துகளைத் தாராளமாகச் சொல்லலாம். அவர்களிடம், “நீ என்ன நினைக்கிறாய்” என்று கேட்கலாம். அவர்கள் தங்கள் அனுபவங்களை மனம்விட்டுச் சொல்வார்கள். கொஞ்ச நேரம் அதுபற்றிப் பேசிய பிறகு அதை இன்னும் வேறு கோணத்தில் எப்படியெல்லாம் யோசிக்க வேண்டும் என்று அவர்களிடமே கேட்டால், அது இன்னொரு அறிவுப்பூர்வமான விவாதத்துக்குப் போகும்.

இதன்மூலம் பெற்றோராக உங்களுக்கு இரண்டு ஆதாயங்கள் கிடைக்கின்றன. ஒன்று, உங்கள் டீன்ஏஜ் பிள்ளையிடம் மனம்விட்டுப் பேச முடிகிறது. இரண்டு, அவர்களைச் சிந்திக்க வைக்க முடிகிறது. நீங்கள் வீட்டில் அமர்ந்து சின்சியராக இரண்டு மணி நேரம் அட்வைஸ் செய்தாலும், இந்த அளவுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முடியாது.

உங்கள் பிள்ளைக்கு ஏழெட்டு வயதுதான் ஆகிறது என்றால், இந்த ‘வாக்கிங் ஷாப்பிங்’ உரையாடலை வேறுவிதமாகக் கொண்டு செல்லலாம். ‘உங்க க்ளாஸ்ல யாரு நல்லா டிராயிங் வரைவாங்க’, ‘உங்க மிஸ்ல யாரு ரொம்ப ஃப்ரெண்ட்லியா பேசுவாங்க’, ‘கடைசியா உங்க க்ளாஸ்ல யாருக்கு பர்த்டே வந்துச்சு. என்ன ஸ்வீட் கொண்டு வந்தாங்க?’ என்பது மாதிரி கேள்விகளைக் கேட்டால் நிச்சயம் அவர்கள் ஆர்வத்தோடு பேச ஆரம்பிப்பார்கள்.

கொஞ்சம் சிந்தித்தால், இந்த 'வாக்கிங் ஷாப்பிங்'கில் அவர்களைப் பேச வைக்க ஏராளமான டாபிக்குகளும் யுத்திகளும் கிடைக்கும். அவர்களைச் சிரிக்கவைக்க இரண்டு ஜோக்குகள் சேர்த்தால், அந்தப் பேச்சை இன்னும் சுவாரசியமாக்கலாம்.

உங்களைப் பிள்ளைகளும், பிள்ளைகளை நீங்களும் புரிந்துகொள்ள இது உதவி செய்யும். இதில் செய்யக்கூடாத சில விஷயங்கள் இருக்கின்றன.

❖ அதிகாரத் தோரணையில் நேரடியாக அறிவுரை செய்யக்கூடாது.

❖ 'உன்னைக் கஷ்டப்பட்டு சம்பாதிச்சி வளக்குறோம், நீ நல்லா படிக்கணும்' என்பது போல உணர்ச்சிவசப்பட்டுப் பேசக்கூடாது.

❖ பேச்சு ஒருவழிப்பாதையாக இருக்கக்கூடாது. பெற்றோர் 40% தான் பேச வேண்டும். மீதம் 60% நேரத்தைப் பிள்ளைக்குதான் கொடுக்க வேண்டும்.

❖ அவசரப்படுத்தாமல் நிதானமாக நடக்க வேண்டும். போக்குவரத்து நெரிசலான இடங்களில் பேச்சை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

❖ கரும்புச்சாறு, ஐஸ்க்ரீம், லஸ்ஸி, நொறுக்குத்தீனி என ஏதோ ஒன்று இருக்க வேண்டும்.

❖ பெற்றோர் தங்களை சூப்பர் ஹீரோ போலக் காட்டிக்கொள்ளக்கூடாது. "நானும் திணறுவேன், குழம்புவேன், பயப்படுவேன். ஆனா எல்லாத்தையும் சமாளிக்கவும் ட்ரை பண்ணுவேன்'' என்ற ரீதியில்தான் பிள்ளைகளிடம் பேச வேண்டும்.


❖ வழியில் பார்க்கும் போஸ்டர்கள், போர்டுகளை வாசித்தபடி விவாதிக்கலாம். 'மொழிப்போர் தியாகிகள் தினம்' என ஒரு போஸ்டர் இருந்தால், அந்தப் போராட்டம் பற்றி விவரிக்கலாம்.

❖ "அந்த மிஸ் எல்லாம் ஒரு ஆளா? சரியான டார்ச்சர் பேர்வழி" என்று பிள்ளை சொன்னால், "மிஸ்ஸை நீ அப்படிச் சொல்லலாமா" என்று உடனே லெக்சர் அடிக்கக்கூடாது. பிறகு நிதானமாக ஒரு நேரத்தில் அந்த அட்வைஸைச் செய்யலாம்.

❖ நீங்கள் பேசும்போது பிள்ளைகள் இடைமறித்து வேறு ஏதோ சொன்னால், டென்ஷன் ஆகக்கூடாது. அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அதே சமயம் அவர்கள் பேசும்போது நீங்கள் எக்காரணம் கொண்டும் இடைமறிக்கக் கூடாது.

மனம்திறந்து உரையாடி, 'வாக்கிங் ஷாப்பிங்'கை இனிமையானதாகவும் அர்த்தமுள்ள அனுபவமாகவும் மாற்றுங்கள்.

– விஜயபாஸ்கர் விஜய்




# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

**யாதும்** சந்தாதாரர் ஆகுங்கள்!

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

டிக் செய்யவும்


☐ ஓர் ஆண்டு ரூ.240

☐ இரண்டு ஆண்டுகள் ரூ.450

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
கரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# சுறுசுறுப்பாகப் படிக்க சூப்பர் வழிகள்!

தேர்வுக்கு இன்னும் சில நாட்களே உள்ளன. படிக்க வேண்டியதும், ரிவிஷன் செய்ய வேண்டியதும், புதிதாகக் கற்றுக்கொள்ள வேண்டியதும் ஏராளமாக உள்ளன. 'நேரம் போதவில்லை' எனத் திணற வேண்டாம். சில டெக்னிக்குகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்தி மூளையை உடனடியாகச் சுறுசுறுப்பாக்க முடியும். எதையும் வேகமாகக் கற்றுக்கொண்டு, ஞாபகத்தில் வைத்திருக்கவும் முடியும்.

● தினம் தினம் படிப்பதற்கு டைம் டேபிள் போட்டுக்கொள்ள வேண்டும். எத்தனை மணி நேரம் படிப்பது, என்னென்ன பாடங்களை எப்போது படிப்பது, ஓய்வெடுப்பதற்கான நேரம் எது என எல்லாவற்றையும் டைம் டேபிள் போட்டுக்கொண்டு செய்ய வேண்டும்.

● உடற்பயிற்சி செய்ய உடல் தயாராக வேண்டும். அதற்காக கை, கால்களை அசைத்து உடலை 'வார்ம்–அப்' செய்கிறோம் அல்லவா? படிக்க உட்காருவதற்கு முன்பாக மூளைக்கும் இப்படி வார்ம்–அப் அவசியம். அப்போதுதான் மூளை சுறுசுறுப்பாகத் தயாராகும். 50, 49, 48 என ஐம்பது எண்களைப் பின்னாலிருந்து சொல்வது... அரை நிமிடத்தில் 20 மரங்களின் பெயர்களைச் சொல்வது... இப்படி மூளையை விறுவிறுப்பாக்க நிறைய பயிற்சிகள் உள்ளன.

● வெறுமனே புத்தகத்தைப் பார்த்துப் படிப்பது என ஒரே மாதிரியான கற்றல் முறையைப் பின்பற்றக்கூடாது. படிப்பது, எழுதிப் பார்ப்பது, படித்த பாடத்தைப் பற்றி நண்பர்களோடு பேசுவது என விதவிதமான கற்றல் முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு முறையிலும் நாம் கற்கும் தகவல்கள், மூளையின் வெவ்வேறு பகுதிகளில் சேமிக்கப்படுகின்றன. வெவ்வேறு முறைகளில் கற்கும்போது, நிறைய விஷயங்கள் ஞாபகத்தில் இருக்கும்.

● ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யக்கூடிய திறமை சிலருக்கு இருக்கும். ஆனால், கற்றல் விஷயத்தில் இதைச் செய்யக்கூடாது. ஒரு பாடத்தைப் படிக்கிறீர்கள் என்றால், அதில் மட்டுமே கவனம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பாடம் நினைவில் நிற்காது.

● வெறுமனே எழுத்துகளாகவும், ஃபார்முலாக்களாகவும் படிப்பதில் அர்த்தமில்லை. அதைத் தினசரி வாழ்க்கையில் பொருத்திப் பார்த்தால், நிரந்தரமாக நினைவில் நிற்கும். எண்களைக்கூடச் சம்பவங்களோடு பொருத்திப் பார்த்தால் நினைவிலிருந்து நீங்காது.

● வெறுமனே படித்துக்கொண்டிருந்தால் போதாது. எப்படிப் படித்திருக்கிறீர்கள் என்பதை அடிக்கடி சோதித்துப் பார்க்க வேண்டும். மாதிரித் தேர்வுகள் எழுதிப் பார்ப்பது, யாரையாவது கேள்வி கேட்கச் சொல்லிப் பதில் சொல்வது என்று படித்ததைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திப் பார்த்தால், அது ஞாபகத்தில் ஆழமாகப் பதியும்.

● குறித்த நேரத்துக்குள் படித்து முடித்தால், மாதிரித் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண் வாங்கினால்,

உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். ஸ்வீட் எடுத்துக் கொண்டாடுங்கள். அப்போது மூளையில் டோபமைன் சுரந்து, நினைவுத்திறனை இன்னும் அதிகமாக்கும்.

● நேரமில்லை என்பதற்காக அடுத்தடுத்து வெவ்வேறு பாடங்களைப் படித்துக்கொண்டே இருந்தால், எதுவுமே நினைவில் இருக்காது. ஒரு பாடத்தைப் படித்ததும், அதை அசை போடுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். மூளைக்கு இந்த நேரம் தேவைப்படுகிறது.

● 45 நிமிடங்கள் படித்தால், ஐந்து நிமிடங்களாவது படிப்பை ஒதுக்கி வைத்துவிட்டு வேறு எதையாவது செய்ய வேண்டும். மூளைக்கு வேலை அதிகமில்லாத எளிமையான விளையாட்டு, பேச்சு என இருக்க வேண்டும். இப்படிச் செய்தால், மூளையின் திறன் மேம்படும்.

● படிக்கும் பாடத்தின் வரிகள் ஞாபகம் இருப்பதில்லை; ஆனால், திரைப்படத்தில் வரும் காட்சிகளும் வசனங்களும் ஞாபகத்தில் இருக்கின்றன. காரணம், அவை காட்சிகளாக மனதில்



பதிவதுதான். எனவே, பாடங்களையும் காட்சிகளாக மாற்றி மூளையில் பதிய வைக்கலாம்.

● தொடர்ச்சியாகப் பல மணி நேரங்கள் ஒரே பாடத்தைப் படித்தால் களைப்பு ஏற்பட்டுவிடும். அதனால் ஒன்றரை மணி நேரத்துக்கு ஒரு பாடம், ஒரு சின்ன பிரேக், அதன் பிறகு வேறு பாடம் எனப் படிக்கலாம். வித்தியாசமான வெவ்வேறு பாடங்களைப் படிக்கும்போது ஆர்வமும் இருக்கும், மூளைக்கும் அயர்ச்சி இருக்காது.

● 'நாம் கற்றதை இன்னொருவருக்குச் சொல்லிக்கொடுக்கும்போதுதான், அது இன்னும் ஆழமாக மனதில் பதிகிறது' என்கிறார்கள் கல்வியாளர்கள். எனவே நீங்கள் படித்த பாடத்தை உங்களின் வார்த்தைகளில் யாருக்காவது சொல்லிக்கொடுங்கள். அப்படி யாரும் கிடைக்கவில்லை என்றால், வீட்டில் இருப்பவர்களை மாணவர்களாக்கி, அவர்களிடம் சொல்லிப் பாருங்கள்.

● நீங்கள் எவ்வளவு சிறப்பாகப் படிக்கிறீர்கள் என்பதில் சூழலும் முக்கியப்பங்கு வகிக்கிறது. சுகாதாரம் இல்லாத, இரைச்சல் நிறைந்த சூழலில் எவ்வளவு ஆர்வமாகப் படித்தாலும் மனதில் ஏறாது. சுத்தமான சூழலில் வசதியாக அமர்ந்து படிக்க வேண்டும். நல்ல காற்றோட்டமான இடமாக அது இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் புதிது புதிதான இடங்களில் அமர்ந்து படியுங்கள். எங்கு அமர்ந்து படித்தோம் என்பதை ஞாபகப்படுத்தினால், பாடமும் ஞாபகத்துக்கு வரும்.

● மனதுக்குப் பிடிக்காமல் எதையும் ஈடுபாட்டோடு செய்ய முடியாது. கடினமான பாடமாக இருந்தாலும், 'இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது; இதை சந்தோஷமாகப் படிக்கிறேன்' எனச் சிரித்தபடி மனதுக்குள் சொல்லிக்கொண்டு படித்தால், இனிதாக மனதில் பதியும்.

● 'எதற்கும் நேரம் ஒதுக்காமல் படிக்கிறேன்' எனப் புத்தகத்திலேயே மூழ்குவது தவறு. 'தினமும் குறைந்தபட்சம் 15 நிமிடங்கள் ஒதுக்கி உடற்பயிற்சி செய்பவர்களின் மூளை புத்துணர்வோடு இருக்கிறது' என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. உடலுக்கும் நேரம் ஒதுக்குங்கள்.

● இரவில் நீண்ட நேரம் கண்விழித்துப் படித்து, தூக்கத்தைத் தியாகம் செய்யாதீர்கள். போதுமான தூக்கம் இருந்தால்தான், மறுநாள் மூளை சுறுசுறுப்பாகத் தயாராகும்.

● தினமும் என்ன செய்தீர்கள் என்பதைப் பற்றி நண்பர்களோடு சில நிமிடங்கள் பேசுங்கள். இது மனதை லேசாக்கி, நினைவுத்திறனை மேம்படுத்தும்.

● தினமும் அதிகாலை தியானம் செய்வதும், யோகா செய்வதும், படித்ததைத் தேர்வு நேரத்தில் தவறில்லாமலும் தடையில்லாமலும் நினைவுக்குக் கொண்டுவந்து தேர்வைக் கச்சிதமாக எழுத உதவுகிறது.

● நிறைய தண்ணீர் குடியுங்கள்; பழங்கள் சாப்பிடுங்கள்; ஒமேகா 3 கொழுப்பு அமிலம் உள்ள மீன், பட்டாணி, பூசணி விதை மற்றும் வால்நட் போன்றவற்றைச் சாப்பிடுங்கள். மூளையின் திறனை இவை மேம்படுத்தும். ●

# உணர்வைத் தூண்டும் உபத்திரவ மனிதர்கள்!

நமக்குள் இருக்கும் எதிர்மறை உணர்வுகளைக் கிண்டி, அதில் மீன் பிடிக்கும் மனிதர்கள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள். அவர்களை எப்படிக் கையாளப் போகிறோம்? அவர்கள் நமக்குத் தேவையா? அல்லது அவர்கள் முற்றிலுமாக ஒதுக்கப்பட வேண்டியவர்களா? இதையெல்லாம் நாம் யோசித்தாக வேண்டும்.

இங்கு உள்ள படத்தைப் பாருங்கள். அதில் ஒருவன் அவன் பாட்டுக்கு போய்க் கொண்டிருக்கிறான். ஒரு நாய் அவனிடம், "நீ நிம்மதியா இருக்கேன்னு மட்டும் சொல்லாதே! உன் மனசோட வலி எனக்குத் தெரியுது. விலகிப் போகாதே! உன் பிரச்னையை என்கிட்ட பகிர்ந்துக்கோ" என்கிறது.

முன்புறம் இருக்கும் அறிவிப்புப் பலகையில், 'உணர்வைத் தூண்டும் நாய் ஜாக்கிரதை' என்று எழுதியிருக்கிறது. 'Emotional Support Dog' என்று இருப்பதில் 'Support'ஐ 'தூண்டும்' என்று எழுதினால்தான் சரியாக வருகிறது. உணர்வைத் தூண்டும் நாயாக இருக்கும் தன்மை, அப்படிப்பட்ட நாயிடம் மாட்டிக்கொள்ளும் தன்மை, சில சமயம் அதை நாமே தேடும் தன்மை எல்லாம் மிக நுட்பமான விஷயம்.

காலையில் வீட்டில் ஒரு பிரச்னை நடந்திருக்கும். யாரிடமாவது கத்திவிட்டு வந்திருப்போம்; அல்லது திட்டு வாங்கிக்கொண்டு வந்திருப்போம். ஒருமணி நேரம் தனியாக இருந்தால், அதை மறந்து இயல்புக்குத் திரும்பியிருப்போம். அப்போது அலுவலகத்தில் ஒருவர் அருகே வந்து, "ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? உங்க முகமே சரியில்லை. ஏதோ ஒண்ணு நடந்திருக்கு. எதுன்னாலும் சொல்லுங்க. மனசுல உள்ளதைக் கொட்டித் தீர்த்திடுங்க" என்பார்.

அப்படி அவர் தூண்டுவதாலேயே காலையில் நடந்த உணர்வுகள் நமக்குள் பொங்கியெழ, அவரிடம் கொட்டித் தீர்ப்போம். அவர் அதை ஆராய்ந்து கிளறி, மேலும் வளர்ப்பார். நாம் இன்னும் பேசுவோம். அன்றைய நாள் முடிவில் ஆவியாய் கரைந்து போயிருக்க வேண்டிய எதிர்மறை உணர்வுகள், நம் மனதில் ஒரு திடத் (Rigid) தன்மையோடு பதிந்திருக்கும்.

இவர்களைத்தான் Emotional Support Dogs என்கிறோம். வாழ்க்கையில் சில நேரங்களில் நாமும் இப்படி இருந்திருப்போம். இப்படி இருக்கும் பலரை எதிர்கொண்டிருப்போம். மனிதர்கள் ஏன் இப்படி ஆகிறார்கள்?





மனிதனுக்குத் தன்னை உயர்வாகப் பார்ப்பது பிடிக்கும். எதிரே இருக்கும் ஒருவரின் வேதனையைக் கேட்டு வருந்தினாலும், ‘அவரைவிட நல்வாழ்க்கை நான் வாழ்கிறேன், அதனால் நான் உயர்ந்தவன்’ என்று அவன் ஈகோ திருப்தியடைகிறது. ‘கணவர் என்னைக் கொடுமைப்படுத்துகிறார்’ என்று இல்லத்தரசி ஒருவர் தங்கள் வீட்டு பணிப்பெண்ணிடம் சொல்லி அழுதால், அந்தப் பணிப்பெண் இனம்புரியாத நிம்மதியை அடைவார். ‘பணத்தில் நாம் குறைந்திருக்கிறோம் ஆனால் நிம்மதியான வாழ்க்கையில் நாம் மேலே இருக்கிறோம்’ என்பது போன்ற ஈகோ திருப்தி அது.

சிலருக்கு இதில், பிறர் வாழ்க்கையை, அந்தரங்கத்தை எட்டிப் பார்க்கும் சுவாரஸ்யம் கிடைக்கிறது. அரிதாகச் சிலர் உண்மையான அக்கறை, பரிதாபம், அன்பு காட்டுகிறார்கள்.

சரி, Emotional Support Dogs நம் வாழ்க்கைக்குத் தேவையா? சில சமயம் கண்டிப்பாகத் தேவைப்படுவார்கள். பல்வேறு காரணங்களால், வெவ்வேறு சூழல்களால் மனத்தில் குழப்பம் சூழும்போது, யாராவது அதைத் தூண்டிப் பெரிதாக்கி நம்மை வெடிக்கவிட்டால் கொஞ்சம் பரவாயில்லை என்று தோன்றும். ஆகையால் அவர்கள் ஒருவிதத்தில் தேவையே.

அவர்களை எப்படிக் கையாள்வது? நம் உணர்வை மறைக்கலாம். நம் பர்சனல் விஷயங்களை வெளியில் காட்டிக்கொள்ளாமல் இருக்கலாம். சிலரிடம் முதலிலேயே, ‘இது என் பர்சனல்’ என்று கறாராகச் சொல்லிவிடலாம். ஆனால், மேலதிகாரி ஒரு Emotional Support Dog ஆக இருந்து விட்டால் பெரும் தொல்லை. ‘எனக்கும் அப்பாவுக்கும் பிரச்னை சார்’ என்று உண்மையைச் சொல்லிவிட்டால், தொடர்ந்து அவர் விசாரித்து விசாரித்து, அந்தப் பிரச்னை தீராமல் பார்த்துக் கொண்டிருப்பார். அவரிடம் உண்மையைச் சொல்லாமல், ‘நைட் சரியா தூக்கம் வரல’ என்று சமாளித்தால் தப்பித்துவிடலாம்.

தான் ஒரு Emotional Support Dog ஆக இருப்பதை உணராமல், அதையே செய்துகொண்டு இருப்பார்கள் சில பேர். “நான் கேள்வி கேட்டு விசாரிச்சபோது, அவனுக்கு பெரிய மனப்பிரச்னை இருந்தது தெரிய வந்தது. என்கிட்ட சொல்லி அழுதான். அதுக்கப்புறம் நிம்மதி ஆகிட்டான். அன்னைக்கு நான் உள்ள போய் இறங்கி நோண்டாம இருந்தா அவனுக்கு நிம்மதி கிடைச்சிருக்குமா” என்பது அவர்கள் சொல்லும் நியாயம்.

சில பேர் தங்கள் பிரச்னையை யாராவது கேட்க மாட்டார்களா என்று Emotional Support Dog மனிதர்களைத் தேடவும் செய்கிறார்கள். Emotional Support Dogs தன்மை மிகக்குறைவாக உள்ள இரண்டு மூன்று நபர்களை வாழ்வில் அடையாளம் கண்டு, அவர்களிடம் மட்டும் உங்கள் பிரச்னைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

மனதளவில் பிரச்னைகள் அனைவருக்கும் வரும். அதற்கான கால அவகாசம் கொடுத்தால், சில பிரச்னைகள் தானாகவே போய்விடும். அதையும் தாண்டிச் சில பிரச்னைகள் இருக்கும். அவற்றை நீங்களே அறிவுரீதியாக யோசித்துச் சரிசெய்ய முடியுமா என்று பாருங்கள். முடியாது என்று தோன்றினால் இன்னொருவரிடம் அதைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

ஆனால் நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் ஒரு பிரச்னையைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளும்போதே அவர்கள் Emotional Support Dog ஆக மாறிவிடுகிறார்கள் என்பதுதான் உண்மை. அவர்களுக்கு அந்த உளவியல் தன்னிச்சையாக வந்துவிடும். உங்களிடம் யாராவது சொன்னால் நீங்கள் அப்படி மாறிவிடுவீர்கள்.

‘இல்லை, என் வாழ்க்கையில் நானும் Emotional Support Dog ஆக இருந்ததில்லை, அப்படி ஒருவரைத் தேடிப் போனதும் இல்லை’ என்று சொல்லும் மனிதர்கள் உலகில் இருக்கவே வாய்ப்பில்லை.

நீங்கள் எப்போது கடைசியாக Emotional Support Dogஐ தேடிப் போனீர்கள்? ஏன் போனீர்கள்? போகாமல் இருப்பது சரியாகப் படுகிறதா? போனது சரி என்று தோன்றுகிறதா?

நீங்கள் கடைசியாக எப்போது யாருக்கு Emotional Support Dog ஆக இருந்தீர்கள்? ஏன் அப்படி இருந்தீர்கள்? இருந்தது சரியாகப் படுகிறதா? இல்லாமல் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறதா? அப்படி ஏன் தோன்றுகிறது?.

இப்படியெல்லாம் யோசியுங்கள்... அப்போது மட்டுமே வாழ்க்கையின் முழுமையை உணர முடியும்.

**– விஜயபாஸ்கர் விஜய்**

# பொதுநலம் என்னும் குணநலம்!



*மனிதரில் ஒருசிலரே*

*வாழ்வுநதியின் அக்கரையை அடைவர்*

*பலரோ*

*இக்கரையிலேயே வாழ்ந்து முடிகின்றனர்.*

*– தம்மபதம் 85*

‘தனக்கென வாழாமல் பிறருக்கென வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இன்றளவும் இருக்கிறது’ என்று புறநானூற்றின் ஒரு பாடலில் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி எழுதியிருப்பார். இவர்களையே அறிவுடையவராக புத்தரின் தம்மபதம் கூறுகிறது.

தன்னைப் பற்றியும் தன் குடும்பத்தினரைப் பற்றியும் மட்டுமே யோசிக்காமல், பிறர் நலத்தையும், சுற்றி உள்ளவர்களின் வளர்ச்சியையும், முகம் தெரியாத மனிதர்களின் பிரச்னைகளைக் குறித்தும் யோசிப்பவர்களையே உலகம் உன்னதமான மகாத்மாக்களாகக் கருதுகிறது.

புத்தர், காந்தி, இயேசு போன்றவர்கள் உலகத்தாரால் வணங்கப்படுவதற்கு மேற்சொன்ன பிறர் நலத்தைப் பற்றியே எப்போதும் சிந்தித்திருத்தலே காரணமாக இருக்கிறது இல்லையா? ஒருவர் மனத்தில் பொதுநலம் குறித்த சிந்தனை எப்போது உருவாகிறது?

எப்போது பிற உயிரின் முக்கியத்துவத்தையும் உணர்கிறோமோ, எப்போது எல்லா உயிர்களையும் நேசிக்கத் தொடங்குகிறோமோ, அப்போதுதான் பொதுநலம் பிறக்கிறது.

நாம் என்ன பிற உயிர்களைவிட மேலானவர்களா? பிற உயிர்கள் எல்லாம் எவ்வாறு இன்ப துன்பங்கள் அடைகின்றனவோ அவ்வாறே நாமும் அடைகின்றோம்.

வள்ளலார் அதைத்தான் பின்வருமாறு சொல்கிறார்:

***எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்***

***தம் உயிர்போல் எண்ணி உள்ளே***

***ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்***

***யாவர் அவர் உளந்தான் சுத்த***

***சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்***

***இடம் என நான் தெரிந்தேன் அந்த***

***வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்***

***சிந்தை மிக விழைந்த தாலோ.***

***( திருவருட்பா – 5298)***

இந்தப் பாடல் சொல்ல வரும் கருத்து: எல்லா உயிர்களையும் தன் உயிர் போல் நினைத்து சம உரிமை வழங்குவோரின் மனத்தில் இறைவன் வாழ்கிறான்.

ஆக, பொதுநலத்தின் வழியே இறைவனையே அடைய முடியும் அல்லவா? தனிப்பட்ட நம் வாழ்க்கையை நாம் கூர்ந்து நோக்கினால், நமது பெரும்பாலான எண்ணங்களும் செயல்களும் பிற

## கதை உணர்த்தும் நீதி 9

## செந்தில் ஜெகன்நாதன்

மனிதர்களின் வாழ்வைச் சார்ந்தே உள்ளதைக் காணலாம்.

நமது இயல்பே கூடி வாழும் தன்மை உடையது தான். பிற மனிதர்கள் பயிராக்கிய தானியங்களையே நாம் உட்கொள்கிறோம், பிறர் நெய்த ஆடைகளையே நாம் உடுத்துகிறோம், பிறர் கட்டிய வீடுகளிலேயேநாம்வசிக்கிறோம். நாம் வாழ்வதற்கான அன்றாடத் தேவைகளும் தகவல்களும் நமது நம்பிக்கைகளும், பெரும்பாலும் பிற மனிதர்கள் மூலமே நம்முள் வியாபித்துள்ளன. சமுதாயம் என்ற சத்தான விளைநிலம் இல்லாமல் எப்படி தனிமனிதனால் வளர்ச்சியடைய முடியாதோ, அதேபோன்று சிந்தனைத் திறன்மிக்க தனிமனிதர்கள் இல்லையென்றால், சமுதாயத்தால் முன்னேற முடியாது என்பதை அவர் அதில் சொல்லியிருக்கிறார்.

அறிவியல்பூர்வமாகவும் இந்த உதவி புரியும் உளவியலை உற்று நோக்கினால், இதன் பின்னால் இருக்கும் மகத்துவம் புரியும். இது உரக்கச் சொல்வது, 'பிறருக்கு உதவுங்கள்' என்பதைத்தான். 'பிறருக்கு எதையும் மனமுவந்து கொடுப்பதால் நம் மூளையிலிருக்கும்சிலபகுதிகள்தூண்டப்படுகின்றன' என அறிவியல்ரீதியாக FMRI எனும் தொழில்நுட்பத்தின் மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே பிறருக்குக் கொடுப்பது என்பது வெறும் நிறைவு மாத்திரம் அல்ல, ஆரோக்கியமான, செழிப்பான, வளமான மற்றும் அர்தமுள்ள வாழ்வை வாழ்வதற்கான தீர்வு.



மகாத்மா காந்தியின் பொதுநலத்தைப்பற்றிச்சொல்வதற்கு ஏராளமான நிகழ்ச்சிகள் அவரது வாழ்க்கையில் நடந்திருக்கின்றன. அதில் குறிப்பிட்ட ஒரு சம்பவம் எப்போது நினைத்தாலும் கலங்க வைக்கக் கூடியது.

காந்திஜி வங்காளத்திலுள்ள சோதேபூரில் தங்கியிருந்தார். பலதரப்பட்ட மக்கள் இடைவிடாது அங்கு வந்து சந்தித்து மகாத்மாவின் விடுதலைஇயக்கத்திற்குநன்கொடை வழங்கிக் கொண்டிருந்தார்கள். சில சமயம் விடுதலை இயக்கத்தைப் பற்றியும், சிற்சில சமயம் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாகவும் மற்றும் சில நேரங்களில் கதர் பயன்பாடு சம்பந்தமாகவும் பிரசார உரைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஒருநாள் கல்கத்தாவிலுள்ள பாகீரத்கனோடியா குடும்பத்திலுள்ள சில பெண்மணிகள் அவரைத் தரிசிக்க வந்திருந்தார்கள். முதலில் அவர்கள் காந்திஜிக்கு வணக்கம் செலுத்தினார்கள். பின், கொஞ்சம் பணத்தைக் கையில் எடுத்து அவருடைய காலடியில் சமர்ப்பித்தார்கள். காந்திஜி அப்பணத்தின் மேல் தன் பார்வையைச் செலுத்திவிட்டு, "இவ்வளவுதானா?" என்றார்.

அனைவருக்கும் நன்கு அறிமுகமான சமூகத்தொண்டர் திரு. சீதாராம் ஸக்ஸேரியா, அந்தச் சமயம் அங்கேயே பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். காந்திஜி கூறிய வார்த்தைகளைக் கேட்டு, "பாபுஜி, நன்றாகப் பாருங்களேன். இவ்வளவு ரூபாய் இருக்கிறது. இது குறைவாகவா தோன்றுகிறது? உங்களுடைய பசி அடங்குவதில்லையே!" எனக் கூறினார்.

உண்மையிலேயே அதில் போதுமான பணம் இருந்தது. ஆனால் காந்திஜி உடனே, "நீ சரியாகவே சொன்னாய். என்னுடைய பசி எப்படி அடங்கும்? எனது பசி இந்தியாவின் பசி ஆயிற்றே" என்று பெருமிதத்துடன் கூறினார்.

எத்தனை மகத்தான எண்ணம் பாருங்கள்... எத்தனை விசாலமான எண்ணம் இருந்திருந்தால் ஒரு மனிதன் இப்படிச் சொல்ல முடியும்? வள்ளலார் சொன்னதும், புத்தர் சொன்னதும், காந்தி வாழ்ந்ததுமாக நமக்கு உணர்த்துவது இந்த மனித மாண்புதானே!

'உங்களுக்கு ஒருமணி நேரம் மகிழ்ச்சி வேண்டுமெனில், ஒரு குட்டித்தூக்கம் போடுங்கள். ஒரு நாள் முழுவதும் மகிழ்ச்சி வேண்டுமெனில் மீன்பிடிக்கச் செல்லுங்கள். ஒரு வருடத்திற்கு மகிழ்ச்சி வேண்டுமெனில் அதிர்ஷ்டத்தைத் தத்தெடுத்துக்கொள்ளுங்கள். வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சி வேண்டுமெனில் யாருக்கேனும் உதவுங்கள்' என்ற பழமொழியை எப்போதும் நினைவில் கொள்வோம். மகிழ்ச்சியோடு அர்த்தமுள்ள வாழ்வை வாழ்வோம்! ●




மழை ஆரம்பிக்கும்போது வரும் வித்தியாசமான மண்வாசனைக்குக் காரணம் மண் அல்ல. தாவரங்களில் இருக்கும் எண்ணெய்கள், மண்ணில் இருக்கும் பாக்டீரியா, வளிமண்டல ஓசோன் ஆகியவையே காரணம்.




கடலில் நீண்ட தூரம் பயணம் செய்யும் சொகுசுக் கப்பல்களில் சகல வசதிகளும் இருக்கும். வாரக்கணக்கில் இதில் சுற்றுலா செல்வார்கள் மக்கள். அந்த நேரத்தில் யாரேனும் இறக்க நேர்ந்தால், அவர்களின் உடலைப் பாதுகாக்க ஒரு பிணவறையும் கப்பலில் உண்டு. ஆண்டுதோறும் 200 பேராவது சொகுசுக் கப்பல்களில் இறக்கிறார்கள்.

அழிந்துவிட்ட பறக்கும் டைனோசர் இனங்களின் நெருங்கிய உறவுகளாக பறவைகள் கருதப்படுகின்றன. அந்த வகையில், பறவைகளை இப்போதும் உயிருடன் இருக்கும் டைனோசர்கள் எனலாம்.



ரோம் நகரில் பழங்காலக் கல்லறை ஒன்றிலிருந்து ஒரு ஒயின் குடுவை கண்டறியப்பட்டது. 1,650 ஆண்டுகள் பழமையான அது, இப்போதும் நன்றாக இருந்தது.

இரண்டாம் உலகப் போரின்போது தங்களைத் தாக்க வந்த ஜப்பான் நீர்மூழ்கிக் கப்பல் மீது உருளைக்கிழங்குகளை வீசினார்கள் அமெரிக்கக் கப்பலில் இருந்த கடற்படை வீரர்கள். அவற்றை கையெறி குண்டுகள் என நினைத்து மிரண்ட ஜப்பானியர்கள் உடனே சரணடைந்து விட்டார்கள்.



ஆப்ரிக்க நாடான நைஜரில் கடந்த 1955 முதல் 50% மக்கள்தொகை 16 வயதுக்குக் கீழே இருக்கிறது. எப்போதும் இளமையான நாடாக அது கருதப்படுகிறது.

வெள்ளி கிரகத்திலும் பனிப்பொழிவு இருக்கும். பூமியின் பனிப்பொழிவில் தண்ணீர் இருக்கும். ஆனால், வெள்ளியின் பனிப்பொழிவில் உலோகங்கள் திரவமாகத் தெளிக்கப்படும்.

காந்தம் ஒன்றைச் சூடுபடுத்தினால், அது தன் காந்தத் தன்மையை இழந்துவிடும்.





ஆஸ்கர் விருதுக்கு ஆரம்பத்தில் 'அகாடமி விருதுகள்' என்றே பெயர் இருந்தது. யார் அதற்கு ஆஸ்கர் என்று பெயர் வைத்தார்கள் என யாருக்கும் தெரியாது. 1932-ம் ஆண்டு முதல் சொல்ல ஆரம்பித்து, அதுவே பிறகு அதிகாரப்பூர்வப் பெயராகிவிட்டது.



ஒருவரை உண்மையைச்
சொல்ல வைப்பதற்கு
எந்த மருந்தும் இதுவரை
கண்டுபிடிக்கப்படவில்லை.
என்றாலும் இந்தியாவிலும்,
ரஷ்யா, கனடா போன்ற
நாடுகளிலும், குற்றவாளிகளை
ஒருவித மயக்க நிலையில்
தள்ளும் மருந்தைக் கொடுத்து
'உண்மை கண்டறியும் சோதனை'
நடத்தப்படுகிறது.

மனிதர்கள், குரங்கு இனங்கள், Opossum எனப்படும் பாலூட்டி விலங்கு ஆகிய உயிரினங்களுக்கு மட்டுமே மற்ற விரல்களுடன் இணைந்து இயங்கும் கட்டை விரல் தனியாக உள்ளது. பொருட்களை இறுகப் பற்ற இந்த அமைப்பு உதவுகிறது. ஆனால், Opossum கட்டை விரலுக்கு நகம் இருக்காது.







'ஏற்கனவே வாங்கிய புத்தகங்களையே படிக்கவில்லை' என சென்னைப் புத்தகக் காட்சி நேரத்தில் நிறைய பேர் புலம்பினார்கள். நிறைய புத்தகங்களை வீட்டில் வாங்கிக் குவித்து, அவற்றைப் படிக்காமலேயே வைத்திருக்கும் பழக்கத்தை ஜப்பானில் 'Tsundoku' என்கிறார்கள்.

நிலவைச் சுற்றிவர அமெரிக்கா முதல் விண்கலத்தை அனுப்பியபோது, ஐந்து மர இனங்களைச் சேர்ந்த சுமார் 500 விதைகள் எடுத்துச் செல்லப்பட்டன. பிறகு அவை அமெரிக்காவிலும் வேறு சில நாடுகளிலும் விதைக்கப்பட்டன. அவற்றில் முளைத்த மரங்கள், நிலா மரங்கள் எனப்படுகின்றன.



நார்வே நாட்டில் ஒரு விநோதமான சட்டம் உண்டு. அதன்படி, அங்கு ஒரு கொலை நிகழ்ந்து 25 ஆண்டுகளுக்குள் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் போனாலோ அல்லது கைது செய்யாமல் போனாலோ, அதன்பின் அவரை ஒன்றும் செய்ய முடியாது.

கடந்த நூறாண்டுகளில் எவரெஸ்ட் சிகரத்தை ஏற முயன்று 290 பேர் இறந்திருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் இறக்கக் காரணம், திடீர் பனிச்சரிவு. பலரின் உடல்கள் இன்னும் மீட்கப்படவே இல்லை.




பலருக்கு வலதுகைப் பழக்கம், சிலருக்கு இடதுகைப் பழக்கம் என்ற வித்தியாசம் மனிதர்களுக்கு மட்டுமே என நினைக்காதீர்கள். பெண் பூனைகள் பெரும்பாலும் வலதுகைப் பழக்கம் உள்ளவை, ஆண் பூனைகள் இடதுகைப் பழக்கம் உள்ளவை.

தேசியக் கொடிகளில் அரிதாகப் பயன்படுத்தப்படும் நிறம், ஊதா. நிகராகுவா மற்றும் டொமினிக்கா நாட்டுக் கொடிகளில் மட்டுமே ஊதா இருக்கிறது.





# நேசிக்கும்போது உலகம் அழகாகும்!

மனிதர்கள் வெளியூர் சென்று சுற்றி, உலகம் மாறியிருப்பதை உணர்ந்து, தாங்களும் மாறித் திரும்பிச் சொந்த ஊருக்கு வந்து பார்த்தால், அவர்களின் ஊர் மாறாமல் பழமைவாதத்தில் மூழ்கி அப்படியே இருக்கும். அப்படி ஒரு துயரத்தைக் காட்டுகிறது, ஹாலிவுட் படமான Mudbound. ஒரு நாவலாக வெளிவந்து, பிறகு திரைப்படமாக எடுக்கப்பட்டு பரபரப்பு ஏற்படுத்தியது இது.

இந்தத் திரைப்படத்தை இரண்டாம் உலகப் போர்ச்சூழலில் காட்டுகிறார்கள். அடிமை முறை ஒழிந்த பிறகும் கூட, வெள்ளையின முதலாளிகள் தம் கறுப்பின பண்ணை வேலையாள் குடும்பங்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதைக் கதை காட்டுகிறது.

ஒரு வெள்ளையினக் குடும்பத்தில் கணவன், மனைவி, அவன் தம்பி, வயதான அப்பா மற்றும் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்கள் பண்ணையில் வேலை பார்க்கும் கறுப்பினக் குடும்பத்தில் கணவன், மனைவி, இரண்டு டீன் ஏஜ் குழந்தைகள், ஒரு வளர்ந்த மகன் என்று ஐந்து பேர் இருக்கிறார்கள். வெள்ளையினக் குடும்பத்துக்கு உள்ள நிலங்களில் வேலை செய்வதுதான் இந்தக் கறுப்பினக் குடும்பத்தின் வேலை.

வெள்ளையினக் குடும்பத்தில் இருக்கும் வளர்ந்த தம்பி, இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க விமானப்படையில் வேலை செய்கிறான். கறுப்பினக் குடும்பத்தில் இருக்கும் வளர்ந்த மகன், இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க பீரங்கிப் படையில் வேலை செய்கிறான்.

ஒரு சமயத்தில் வெள்ளையினக் குடும்பத்தில் இருக்கும் இரண்டு சிறு குழந்தைகளுக்கும் கக்குவான் இருமல் வந்துவிடுகிறது. அந்த அம்மா திணறுகிறாள். அப்போது கறுப்பினக் குடும்பத்தின் அம்மா வந்து உதவி செய்து அக்குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுகிறார். இப்படி தன் பேரக்குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவர் வீட்டுக்குள் வருவதைக்கூட வெள்ளையின தாத்தா வெறுக்கிறார். அந்த அளவுக்கு நிறவெறி கொண்டிருக்கிறார்.

இங்கே கறுப்பின ராணுவ இளைஞன் ஜெர்மனியில் பீரங்கிப் படையோடு தங்கியிருக்கும்போது அங்கே ஒரு ஜெர்மனியப் பெண்ணோடு காதல் கொண்டு கொஞ்ச காலம் வாழ்கிறான். போர் முடிந்ததும் வீடு திரும்புகிறான். வீடு திரும்பும்போது ஒரு ஸ்வீட் கடையில் இனிப்புகள் வாங்கிக் கொள்கிறான். அப்போது அந்த வெள்ளையின நிறவெறி தாத்தா வருகிறார். அவனை நோக்கி, "நீ முன்வாசல் வழியே இக்கடைக்குள் நுழையக்கூடாது. பின்வாசல் வழியேதான் வர வேண்டும்" என்கிறார். அதற்கு அவன், "நாங்களும் இந்த நாட்டு ராணுவத்தில் இணைந்து நாட்டையும் இம்மக்களையும் காப்பாற்றுகிறோம். எங்களுக்கும் உரிமை உண்டு" என்கிறான். ஆனால் பின்வாசல் வழியேதான் வெளியேறுகிறான்.

இதை வெள்ளையின தாத்தா தன் மகனிடம் சொல்கிறார். மகன் வந்து கறுப்பினக் குடும்பத் தலைவரிடம், "நீங்கள் எல்லாம் அதிகம் பேசுகிறீர்கள். இந்த நிலத்தைக் காலி செய்து போய்விடுங்கள்" என்கிறார். கறுப்பினக் குடும்பத் தலைவர் தன் ராணுவ

வீர மகனை மன்னிப்புக் கேட்கும்படிச் சொல்ல, அவன் எரிச்சலிலும் மன வேதனையிலும் வேறு வழியில்லாமல் மன்னிப்புக் கேட்கிறான்.

வெள்ளையின தாத்தாவின் இரண்டாவது மகன் விமானப்படை வீரனாக வேலை செய்தான் அல்லவா? அவனும் போர் முடிந்து திரும்பி வருகிறான். அவனால் போரில் பலரைக் கொன்றதை மறக்க முடியவில்லை. நிறைய குடிக்கிறான். தன் அண்ணனின் பண்ணையில் ஒரு கறுப்பின ராணுவ வீரன் போர் முடித்து வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டு அவனோடு நட்பாக வருகிறான். இரு வீரர்களுக்கும் பகிர்ந்துகொள்ள நிறைய இருக்கிறது என்று நினைக்கிறான்.

முதலில் அவன் நட்பை மறுத்த கறுப்பின வீரன்,






வெள்ளையின ராணுவ வீரனின் தொடர்ந்த அன்பினால் உருகிப் போகிறான். இருவரும் நட்பாகிறார்கள். போரில் அவர்கள் செய்த சாகசங்களைப் பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். வெள்ளையின வீரன் தன் அப்பாவுக்குத் தெரியாமல் ரகசியமாக கறுப்பின வீரனைக் காரில் அழைத்துச் செல்வான்.

கறுப்பின வீரனின் ஜெர்மனியக் காதலி அங்கிருந்து ஒரு கடிதம் எழுதுகிறாள். அதைப் படித்து அவன் மகிழ்ச்சியாகிறான். காரணம், அவன் காதலி ஜெர்மனியில் குழந்தை பெற்றிருக்கிறாள். குழந்தையின் புகைப்படத்தையும் அனுப்புகிறாள். எப்படியாவது அவளைப் பார்த்துவிடத் துடிக்கிறான். வெள்ளையின வீரன் நண்பனோடு காரில் போகும்போது அதுபற்றி விவாதிக்கிறான். அப்போது வெள்ளையின வீரனின் அப்பா அவர்களைப் பார்த்துவிடுகிறார்.

கறுப்பின வீரன் இறங்கி ஓடிவிடுகிறான். அப்போது தன் ஜெர்மனியக் காதலி எழுதிய கடிதத்தையும் புகைப்படத்தையும் காரிலேயே விட்டு விட்டுச் சென்று விடுகிறான். இங்கே வெள்ளை தாத்தா தன் மகனை, கறுப்பினத்தவனைக் காரில் ஏற்றிச் சென்றதற்காக அடிக்கிறார். 'இனிமேல் நீ காரை எடுக்காதே' என்று கார் சாவியைப் பறிக்கிறார். காரில் ஜெர்மானிய வெள்ளையினப் பெண் கறுப்பின வீரனுக்கு எழுதிய கடிதமும், அவர்கள் குழந்தையின் புகைப்படமும் இருப்பதைப் பார்க்கிறார். ஒரு கறுப்பினத்தவன் வெள்ளையினப் பெண்ணோடு கலந்து குழந்தையும் பெறுவதா என்று கொதிக்கிறார்.

அன்றிரவு கறுப்பின வீரனை வெள்ளையின அடிப்படைவாதிகளை வைத்து தூக்கிவந்து ஒரு கொட்டகையில் வைக்கிறார். தன் நண்பனைக் காப்பாற்ற வரும் தன் ராணுவ வீர மகனையும் அடித்துக் கட்டிப் போடுகிறார். "உன் கறுப்பின நண்பனின் கண்களைக் கொத்த வேண்டுமா, அந்தரங்க உறுப்பை அறுக்க வேண்டுமா, நாக்கை அறுக்க வேண்டுமா அல்லது கொல்ல வேண்டும்? நீயே சொல்'' என்கிறார். வெள்ளையின வீரன் வேறு வழியே இல்லாமல், "நாக்கை அறுத்துக் கொள்ளுங்கள்'' என்கிறான்.

வெள்ளையினப் பெண்ணை காதலித்த குற்றத்துக்காக கறுப்பின வீரனின் நாக்கு துண்டிக்கப்படுகிறது. தங்கள் மகனுக்கு நேர்ந்த கொடுமைக்குப் பதிலுக்கு எதுவும் கேட்க முடியாமல் அந்த கறுப்பினக் குடும்பம் பண்ணையை விட்டு வெளியேறுகிறது.

மறுநாள் தன் நிறவெறி அப்பாவை வெள்ளையின வீரன் தலையணையை வைத்து அமுக்கிக் கொன்று பழிதீர்த்துக் கொள்கிறான். வெளியேறும் கறுப்பினக் குடும்பத்து ராணுவ வீரனிடம், ஜெர்மனிப் பெண்ணின் கடிதத்தைக் கொடுக்கிறான். அதன்பின் கறுப்பின வீரன் தன் காதலியை ஜெர்மனியில் சந்தித்து தன் குழந்தையைத் தழுவிக் கொள்கிறான்.

மனதை உருக்கும் இப்படத்தில், ஒரு காலத்தில் அமெரிக்காவில் எப்பேர்ப்பட்ட நிறவெறி இருந்திருக்கிறது என்பதைக் காட்டியுள்ளனர். நிறம், சாதி, மதம் அனைத்தையும் கடந்து மனிதர்களை நேசிக்கும்போது மட்டுமே இந்த உலகம் இன்னும் அழகாகும் என்பது இத்திரைப்படம் கொடுக்கும் செய்தி.

**– விஜயபாஸ்கர் விஜய்**

# எழுதிப் பழகுவது மறக்கக் கூடாது!



குழந்தைகள் வளரும்போது அவர்களுக்கு ஆர்வமும் பரவசமும் தரும் விஷயம், எழுத்து. சுவற்றிலும் நோட்டுப் புத்தகங்களிலும் எழுதியும் கிறுக்கலாக படங்கள் வரைந்தும் அவர்கள் உற்சாகம் பெறுவார்கள். வண்ணம் தீட்டுவதற்காகப் படங்கள் நிறைந்த நோட்டுகளை வாங்கிக்கொடுத்து அவர்களின் ஆர்வத்தை வளர்ப்பார்கள் பெற்றோர்கள். அவர்களின் கிறுக்கல்களையும் சகித்துக்கொள்வார்கள். ஒரு குழந்தையின் கற்பனைத்திறனும் சிந்திக்கும் ஆற்றலும் எழுதுவதாலும் வரைவதாலும் வளர்கின்றன.

குழந்தை பேச ஆரம்பித்த பிறகு சிலேட்டும் பென்சிலும் கொடுத்து, எண்களையும் எழுத்துகளையும் அறிமுகம் செய்கிறோம். பள்ளிக்குச் சென்றதும் நான்கு வரி நோட்டுப் புத்தகமும் பென்சிலும் கொடுத்துக் கையெழுத்தைப் பழக்குகிறார்கள். சீக்கிரமே பென்சிலின் இடத்தை பேனா பிடித்துவிடுகிறது.

ஆனால், குழந்தைகள் மேல் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல எழுதுவது குறைந்துவிடுகிறது. பள்ளியில் தரும் புராஜெக்ட் வேலைகளைக்கூட வெளியில் யாரிடமோ செய்து வாங்கிக்கொள்கிறார்கள். ஹோம் ஒர்க் எழுதுவது, தேர்வு எழுதுவது தவிர கைகளுக்கு வேலை இருப்பதில்லை. இலக்கணம், மொழி, கணிதம், பிற பாடங்கள் என்று எல்லாவற்றிலும் என்னென்ன படிக்க வேண்டும் என்று பாடத்திட்டம் இருக்கிறது. ஆனால், 'இந்த வயதில் இதையெல்லாம் எழுதிப் பழக வேண்டும். இந்த இந்த வகுப்புகளில் இவ்வளவு நேரம் எழுத வேண்டும்' என்றெல்லாம் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டம் இல்லை. ஒரு வாக்கியத்தை எழுதி, அதில் எங்கே என்னென்ன வர வேண்டும், எது எதற்கு கேப்பிட்டல் எழுத்து பயன்படுத்த வேண்டும், எங்கெங்கே புள்ளியும் கமாவும் வர வேண்டும் என்று இலக்கணம் சொல்லித் தர மட்டுமே எழுத்து இன்னமும் பள்ளிகளில் இருக்கிறது.

பள்ளி முடித்து வெளியில் வரும்போது பென்சிலை மறக்கிறோம்; கல்லூரியிலிருந்து வெளியில் வந்ததும் பேனாவை மறக்கிறோம். அதன்பின் கையெழுத்து போட மட்டுமே பேனாவை எடுக்கிறோம். கணினியால் நிறைந்த உலகில் கையால் எழுதும் சுகம் காணாமல் போய்விட்டது. தொழில்நுட்பம் இன்றைய உலகத்தை உள்ளங்கைக்குள் கொண்டு வந்துவிட்டது; ஆனால் உறவின் மாண்புகளைத் தொலைதூரத்துக்குத் தள்ளி வைத்துவிட்டது. 'நலம். நலமறிய ஆவல்' என ஆரம்பித்து யாரும் இப்போதெல்லாம் கடிதம் எழுதுவதில்லை. இப்போது தபால்காரர் டெலிபோன் பில் தர மட்டுமே வீடுகளுக்கு வருகிறார்.



உறவுகள் தூரத்துக்குப் போனது போலவே கையால் எழுதும் பழக்கமும் விலகிப் போய்விட்டது. மளிகை லிஸ்ட், போன் நம்பர் தவிர வேறு எதை எழுதவும் பலர் பேனா எடுப்பதில்லை.



ஒவ்வொருவரின் கைரேகை போலவே கையெழுத்தும் தனித்துவமானது. ஒரே வயிற்றில் பிறந்தவர்களுக்குக்கூடக் கையெழுத்து ஒரே மாதிரி இருப்பதில்லை. முதன்முதலாகப் பள்ளியில் விரல் பிடித்து எழுதப் பழக்கிய ஆசிரியரின் பெயரை நினைத்துப்பாருங்கள். நேர்க்கோடுகளாகவும், வளைத்தும், புள்ளிகள் இட்டும் எழுதிய ஒவ்வொரு எழுத்தும் மனதில் பதிய எத்தனை நாட்கள் ஆயின!

நிறைய புத்தகங்கள் படிக்கும்போது நமக்கு புதுப்புது வார்த்தைகள் அறிமுகம் ஆகும். எழுதிப் பழகும்போதே நமக்கு அவை மனதில் பதியும். போன் நம்பர்களை நோட்டில் எழுதிவைத்து சேமித்த காலத்தில் நமக்குக் குறைந்தபட்சம் 20 பேரின் எண்களாவது நினைவில் இருந்தன. செல்போனிலேயே சேமிக்கும் வசதி வந்த பிறகு, பெற்றோரின் எண்கள் கூடப் பல பிள்ளைகளுக்கு நினைவில் இருப்பதில்லை. கம்ப்யூட்டரிலும் செல்போனிலும் டைப் செய்வது மட்டுமே எழுத்து என்றாகிவிட்டதால், எழுத்துப்பிழை இல்லாமல் பலர் மொழி கற்க முடிவதில்லை. வார்த்தைகளைத் தப்பாக எழுதினாலும், இலக்கணம் தப்பாக இருந்தாலும், கம்ப்யூட்டர் சரி செய்துவிடுகிறது. கையால் எழுதிப் பழகுவதே நினைவாற்றலை வளர்க்கும். தசைகளுக்கும் வலிமை கொடுக்கும். கைகளின் இயக்கத்துக்கு உதவும். எந்த விஷயத்திலும் நீண்ட நேரம் கவனம் செலுத்தி, கூர்ந்து கற்கும் ஆற்றலை வளர்க்கும்.

ஒருவரின் தலையெழுத்தை மாற்ற முடிகிறதோ இல்லையோ, கையெழுத்தை மாற்ற முடியும். கிறுக்கலாக எழுதுபவரின் கையெழுத்தைத் திருத்தி அழகாக்கும் பயிற்சிகள் உண்டு. 'காலிகிராஃபி' என்று இதற்குப் பெயர். கையெழுத்து பற்றிய ஆராய்ச்சியை 'கிராஃபாலஜி' என்கிறார்கள். 'மூளையின் செயல்பாடுகளே உடலில் இருக்கும் உறுப்புகளை இயக்குகின்றன. எனவே, உடல் உறுப்புகளின் செயல்களைக் கணிப்பதன் மூலம் நம் சிந்தனைகள் எப்படியானவை, அவற்றின் விளைவால் எதிர்காலம் எப்படி அமையும் என யூகிக்க முடியும்' என்பது இதன் கருத்து.

உதாரணமாக, ஒருவர் எப்போதும் பேனாவால் காகிதத்தில் கிறுக்கிக்கொண்டே இருக்கிறார் எனில், அவர் குழப்பத்தில் இருக்கிறார் என்று அர்த்தம். வெறும் கிறுக்கல்களாக இல்லாமல், தனது கையெழுத்தையே அடிக்கடி போடுகிறார் எனில், ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர் வெற்றியைச் சந்திப்பது நிச்சயமாம். பெரிய எழுத்துகளாக எழுதுபவர்கள், அதிகாரம் செலுத்துவதில் ஆர்வம் காட்டுவார்கள். சிறிய எழுத்துகளாக எழுதுபவர்கள், எந்த வேலையையும் திட்டமிட்டு நேர்த்தியாகச் செய்வார்கள். வலது பக்கம் சாய்த்து எழுதுகிறவர்கள், பொதுவாக ஊக்கமும் உழைப்பு உள்ளவர்கள். இடது பக்கம் சாய்த்து எழுதுகிறவர்கள் தனிமை விரும்பிகளாக இருப்பதோடு, எதிர்காலம் குறித்துப் பயம் உடையவர்களாக இருப்பார்கள். செங்குத்தாய் எழுதுகிறவர்கள் பெரும்பாலும் உணர்ச்சிவசப்படுபவர்களாகவும் தனிமை விரும்பிகளாகவும் இருப்பார்கள்.

வார்த்தைகளுக்கு இடையே விடப்படும் இடைவெளி சம அளவாக இருந்தால், அவர்கள் தெளிவான மனம் உடையவர்களாக இருப்பார்கள். இடைவெளி சம அளவாக இல்லையென்றால், அவர்கள் குழப்பவாதிகள். சங்கிலித் தொடர் போல எழுதுபவர்கள், எதிலும் அதிக ஆர்வம் காட்டுவார்கள். சுழிகளை அளவுக்கு அதிகமாகச் சுழிப்பவர்கள், விடாமுயற்சியோடு எதையும் சாதிப்பார்கள். நிறுத்தி, நிதானமாக எழுதுபவர்கள் கடின உழைப்பாளிகள்.

கம்ப்யூட்டர் எல்லோருக்கும் ஒரே மாதிரியே எழுதித் தரும். நம் கையெழுத்தில் ஒருவித தனித்தன்மை இருக்கும். உங்கள் தனித்தன்மையை இழந்துவிடாதீர்கள். ●



## மாநிலக் கல்விக்கொள்கை ஏப்ரலில் தயாராகும்!

தமிழ்நாடு மாநிலத்துக்கு தனியாகக் கல்விக்கொள்கை உருவாக்குவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு தமிழ்நாட்டின் பலமாவட்டங்களில் கருத்துக்கேட்பு கூட்டங்கள் நடத்தியது. இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களிடம் கருத்துக் கேட்டது. இதற்கான கூட்டம், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடைபெற்றது. மாநிலக் கல்விக்கொள்கைக் குழு தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி முருகேசன், உயர்கல்வித் துறை செயலர் கார்த்திகேயன் மற்றும் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

“பல்வேறு மாநிலத் துணைவேந்தர்களிடம் கருத்துகள் பெறப்பட்டன. அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு வகைப் பாடத்திட்டங்கள் இருந்தால்தான், மாணவர்களின் திறன் அதிகரிக்கும் என்று அவர்கள் கூறினர். பெற்ற கருத்துகளின் அடிப்படையில் கல்விக்கொள்கையின் இறுதி அறிக்கை தயாரிக்கும் பணி பிப்ரவரியில் தொடங்கும். ஏப்ரல் இறுதிக்குள் முடித்து அரசிடம் வழங்கப்படும். புதிய தொழில்நுட்பங்கள், புதிய பாடத் திட்டங்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகள் அறிக்கையில் இடம்பெறும்” என்று குழுத் தலைவர் கூறியுள்ளார்.




## பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்!

தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அடங்கிய பள்ளி மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமையில் இந்தக் குழு கூடி, பள்ளியின் வளர்ச்சிப் பணிகள்




## எய்ம்ஸ் அடுத்த செட் மாணவர்கள்!

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரியும் அமைக்கப்படும் எனக் கடந்த 2015 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இதுவரை கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. 2019 ஜனவரியில் பிரதமர் மோடி இதற்கு அடிக்கல் நாட்டியதுடன் நிற்கிறது.

இதற்கிடையே மருத்துவக் கல்லூரியில் மாணவர் சேர்க்கை கடந்த ஆண்டே தொடங்கிவிட்டது. மாணவர் சேர்க்கையைத் தொடங்கினாலாவது விரைந்து கட்டுவார்கள் என்பதால், அவர்களுக்குத் தற்காலிக மாற்று இடம் தருவதற்குத் தமிழக அரசு ஒப்புக்கொண்டது. ஏதேனும் ஒரு பல்கலைக்கழகம் அல்லது கலைக்கல்லூரியில் எய்ம்ஸ் மாணவர்களுக்கு இடம் கேட்டது மத்திய அரசு. ஆனால், மதுரையிலிருந்து 100 கி.மீ., தூரத்தில் இருக்கும் ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரியிலேயே அவர்களுக்கு இடம் தந்தது தமிழக அரசு. இரண்டாவது ஆண்டாக இந்த ஆண்டும் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டு ராமநாதபுரத்தில் படிக்கிறார்கள். இதுவரை எய்ம்ஸில் சுற்றுச்சுவர் மட்டுமே தயாராகியுள்ளது.

குறித்து ஆலோசிப்பது வழக்கம். இந்நிலையில், பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டத்தை இனி ஒவ்வொரு வாரமும் கடைசி வெள்ளிக்கிழமைக்குப் பதில் முதல் வெள்ளிக்கிழமையில் நடத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.







## ஆராய்ச்சி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை!

பிஹெச்.டி., ஆராய்ச்சி செய்யும் பட்டியல் இன மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குப் பல்வேறு கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது, முழுநேர முனைவர் பட்டப்படிப்பான பிஹெச்.டி., படிக்கும் மாணவர்களுக்கான கல்வி ஊக்கத்தொகைத் திட்டம்.

குடும்ப ஆண்டு வருமானம் எட்டு லட்சம் ரூபாய்க்குக் குறைவாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை பெறத் தகுதியுள்ளவர்கள். ஒரு மாணவருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம், 1,600 மாணவர்களுக்கு இந்தக் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்த ஆண்டு கல்வி ஊக்கத்தொகை பெற விரும்பும் மாணவர்கள், விண்ணப்பத்தை www.tn.gov.in/forma/deptname/1 என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யலாம். விண்ணப்பங்களை பிப்ரவரி 10–ம் தேதிக்குள் 'இயக்குநர், ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை–5' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.






## பசுமைப்பள்ளிகள் 500

விவசாயம் மற்றும் சூழலியல் ஆர்வத்தை மாணவர்கள் மனதில் விதைக்கும் விதமாக தமிழ்நாட்டில் பசுமைப்பள்ளித் திட்டம் தொடங்கப்படும் என அரசு அறிவித்தது. பசுமைப்பள்ளித் திட்டம் என்பது பள்ளிகளில் மாணவர்கள் மூலமாக மழைநீர் சேகரிப்பு, மக்கும் உரம் தயாரிப்பு, காய்கறித் தோட்டம் உருவாக்குவது, நீர் பயன்பாட்டைக் குறைப்பது, கழிவுநீரை மறுசுழற்சி செய்வது, பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் ஒருங்கிணைந்த திட்டம் ஆகும். மாணவர்கள் விளைவிக்கும் காய்கறி, சத்துணவில் பயன்படுத்தப்படும்.

இந்த நிதியாண்டில் 25 அரசுப் பள்ளிகளில் தலா ரூ.20 லட்சம் மதிப்பில் பசுமைப்பள்ளித் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. இதையடுத்து தமிழ்நாட்டில் முதல்முறையாக திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பசுமைப்பள்ளித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதைத் தொடங்கிவைத்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, "இந்த திட்டம் 500 பள்ளிகளில் கொண்டுவரப்பட உள்ளது. மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமின்றி நடுநிலைப் பள்ளிகளிலும் பசுமைப்பள்ளித் திட்டம் விரிவுபடுத்தப்படும்" என்று அறிவித்தார்.




## கல்லூரிகளில் முதலாண்டு பாடத்தை முடிக்க வேண்டும்!

தமிழ்நாட்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் முதலாண்டு மாணவர்களுக்கான பாடங்களை மே 1–ம் தேதிக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என தமிழ்நாடு கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் ஈஸ்வரமூர்த்தி உத்தரவிட்டுள்ளார். இதற்காகத் தேவைப்பட்டால் அனைத்து சனிக்கிழமைகளிலும் கல்லூரியை நடத்தலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் வழக்கமாக கல்லூரிகளில் முதலாண்டு மாணவர் சேர்க்கை செப்டம்பர் 30–ம் தேதியுடன் முடிவடையும். இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு பல புதிய திட்டங்களை அறிவித்தது. கூடவே நீட் தேர்வு முடிவுக்காகவும் காத்திருந்தது. அறிவியல் பாடங்களில் சேரும் பல மாணவர்கள், நீட் தேர்வு முடிவு வந்ததும், இங்கிருந்து விலகி மருத்துவம் படிக்கப் போய்விடுகிறார்கள். இதனால் முன்னணி அரசுக் கல்லூரிகளில் காலியிடங்கள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காகக் காத்திருந்து நவம்பர் 18 அன்றுதான் கல்லூரி சேர்க்கைகள் முடிக்கப்பட்டன. என்றாலும், மே 1–ம் தேதிக்குள் பாடங்களை முடித்தால்தான், உரிய நேரத்துக்குள் தேர்வுகளை நடத்த முடியும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.





## அரசுப்பள்ளியில் ஸ்டெம் ஆய்வகம்!

அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய நான்கு பாடங்கள் எதிர்காலத் தலைமுறைக்கு அவசியம். பள்ளிகளில் அறிவியல் சார்ந்த ஆர்வத்தை மாணவர்களிடம் தூண்டுவதற்கு இது உதவுகிறது. இவற்றைப் பெறுவதை ‘ஸ்டெம்’ கல்வி (STEM education–Science, Technology, Engineering and Mathematics) என்கின்றனர். இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசுப்பள்ளி ஒன்றில் ஸ்டெம் ஆய்வகம் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை அரும்பாக்கம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் இது அமைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் வானவில் மன்றம் திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் இவற்றை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக அமெரிக்க–இந்திய அறக்கட்டளையின் உதவியுடன் இந்த ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது. இதைத் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் துணைத் தலைவரும், இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானியுமான மயில்சாமி அண்ணாதுரை திறந்து வைத்தார். “நம் இளைஞர்களின் திறன்களை நம் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதைப் பள்ளிகளிலேயே தொடங்க வேண்டும். ஆனால், விளையாட்டுக்கு கொடுக்கும் அளவுக்கு கூட அறிவியல் தொழில்நுட்பத்துக்கு நாம் வாய்ப்புகள் தருவதில்லை. இந்நிலை மாற வேண்டும். அதற்கு வானவில் மன்றம் திட்டம் உதவியாக இருக்கும். நானும் அரசுப் பள்ளியில் படித்தவன்தான். கிடைக்கும் வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் நாம் சாதனை புரியலாம்” என்றார் அவர்.

# கல்வி முன்னேற்றத்துக்கு தடை இல்லை!



முல்லா நடந்து வந்து கொண்டிருக்கும்போது பெரிய ஆலமரம் இருப்பதைப் பார்த்தார். சற்றே இளைப்பாறலாம் என்று அதன் நிழலில் அமர்ந்தபோது ஒரு சிறுவன் அழும் சத்தம் கேட்டது.

அவர் திரும்பிப் பார்த்தார். தூரத்தில் ஒரு சிறுவன் அழுது கொண்டிருந்தான். அவனை அருகே அழைத்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு இந்த வாழ்க்கையே பிடிக்கவில்லை. நான் பரிதாபத்துக்குரிய ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். கல்வி கற்கும் வசதி என்னிடமில்லை. பள்ளியில் மட்டும்தான் என்னால் படிக்க முடியும். டியூஷன் படிக்கவோ, பிற மாணவர்கள் போல கைடுகள் வாங்கவோ வசதியில்லை. நான் ஏழை. என்னால் முன்னேற முடியாது என்று தெளிவாகப் புரிகிறது. அதனால்தான் வேதனையில் அழுகிறேன்" என்றான் அவன்.

முல்லா அவனைக் கொஞ்ச நேரம் பார்த்தார். பிறகு பக்கத்தில் இருக்கும் தோட்டத்தைக் காட்டி, "இந்த தோட்டத்துக்காரர் என் நண்பர்தான். அங்கே போய் தர்ப்பூசணி பழம் ஒன்றைப் பறித்து வா. முதலில் குளிர்ச்சியாய் அதைச் சாப்பிடு. அதன் பிறகு நாம் பேசலாம்" என்றார்.

சிறுவன் தோட்டத்துக்கு ஓடிப்போய் நடுத்தர அளவில் ஒரு கனிந்த தர்ப்பூசணிப் பழத்தைப் பறித்துவந்தான். அதை உடைத்து இருவரும் சாப்பிட்டார்கள்.

முல்லா அவனிடம், "இந்தப் பெரிய தர்ப்பூசணியைப் பறிக்க கஷ்டப்பட்டிருப்பாயே. நேரம் ஆகும் என்று நினைத்தேன். ஆனால் நீ உடனே வந்துவிட்டாயே" என்றார்.

"ஐயா, இந்தப் பழம்தான் பெரியது. ஆனால் அது வளர்ந்திருக்கும் கொடி மிகவும் மெலிதானது. தரையிலேயே படர்ந்திருப்பதால், இதை எளிதில் பறித்துவிடலாம்" என்றான்.

"அப்படியா? மெல்லிய கொடியிலா இவ்வளவு பெரிய பழம் பழுத்தது!" ஆச்சரியப்படுவது போல நடித்தார் முல்லா.

"ஆம் ஐயா!"

"மேலே பார், எவ்வளவு பெரிய ஆலமரம். ஆனால் அதன் பழங்கள் சிறியதாக, உயரத்தில் இருக்கின்றன."

"ஆமாம், இதை நாம் சாப்பிடக்கூட முடியாது" என்றான் சிறுவன்.

"பெரிய ஆலமரத்தில் சிறிய பழமே கிடைக்கிறது. ஆனால், மெல்லிய கொடியில் பெரிய தர்ப்பூசணி காய்க்கிறது. அதுபோல மிகப்பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர்களும் சோம்பேறித்தனம், ஒழுக்கமின்மை போன்ற காரணங்களால் முன்னேறாமல் இருப்பார்கள், இந்த ஆலமரத்துப் பழம் போல! சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ஏழைகள் கூடத் தங்கள் சுறுசுறுப்பு, ஒழுக்கம் போன்றவற்றால் முன்னேற முடியும், இந்த மெல்லிய கொடியில் விளைந்த தர்ப்பூசணி பழம் போல" என்றார் முல்லா.

சிறுவனுக்கு தர்ப்பூசணி பழத்தை வைத்து எளிமையாக முல்லா சொன்ன வாழ்க்கை அறிவுரை பிடித்திருந்தது. அவருக்கு நன்றி சொல்லி, கல்வி கற்க நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் சென்றான்.

**– விஜயபாஸ்கர் விஜய்**



# வோல்டேரால் நேசிக்கப்பட்ட கணிதவியலாளர்!

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புரட்சியாளர் என அறியப்படுகிறார் வோல்டேர். பிரெஞ்சு அறிவொளி இயக்கத்தின் மிக முக்கிய ஆளுமை வோல்டேர். உலக வரலாற்றில் நிறுவனப்படுத்தப்பட்ட அரசியல் மையம், அதிகாரம், மதம் போன்றவற்றை எதிர்த்து வோல்டேர் அளவுக்கு சமர் புரிந்தவர்கள் வெகுசிலரே. நாடகம், கவிதை, தத்துவவியல், அறிவியல், சட்டம், கலை, கவிதை, பகடி எனப் பல இலக்கியத் தளங்களில் செயல்பட்டார்; கிரேக்கம், லத்தீன், பிரெஞ்சு எனப் பன்மொழிப் புலமை கொண்டிருந்தார். 20,000 கடிதங்கள், 2,000 நூல்கள் என ஒரு பெரும் எழுத்துப் பொக்கிஷத்தை விட்டுச்சென்றவர் வோல்டேர்.

அந்தவோல்டேரின் அன்புக்காதலியாகமட்டுமே அறியப்பட்டவர் எமிலி து சாதலெ. எமிலியை ஹோரேஸ், நியூட்டன் உள்ளிட்ட மாபெரும் மேதைகளுடன் ஒப்பிடுகிறார் வோல்டேர். அவரை அவ்வளவு மதிப்புடன் ஒப்பிடும் வோல்டேர் ஒரு கட்டத்தில் உயிர் பிழைத்ததும் எமிலியால்தான். ஆண் மேதைகளை போற்றிக்கொண்டாடும் உலகம், பெண் மேதைகளை ஒதுக்கி மறைக்கிறது.




எமிலி, வோல்டேரின் சமகாலத்தில் வாழ்ந்த கணித, இயற்பியல் மேதை. அவரது ஓவியங்கள் எல்லாமே கையில் பிரியாயத்துடன் (divider) அவர் அமர்ந்திருப்பது போலக் காட்சிப்படுத்துபவை. இதற்குச் சொல்லப்பட்ட கதை மிக சுவாரசியமானது. சிறுவயதில் அவர் விளையாட பொம்மை ஒன்றை அவரது வீட்டுப் பணிப்பெண் செய்துகொடுத்தார். அதன் கால் பகுதியை வீட்டிலிருந்த டிவைடர் கொண்டே செய்திருந்தார் அப்பெண். பொம்மையை வாங்கிய சிறுமி எமிலி, அதன் காலை, தனியே பிய்த்து எடுத்து, அதைப் பயன்படுத்தி வட்டம் வரைந்தார் எனச் சொல்லப்படுகிறது. அவர் வாழ்ந்த காலத்தில் அவர் நினைவுகொள்ளப்பட்டது வோல்டேருடனான அவரது காதலுக்கு மட்டுமேயன்றி அவரது எழுத்துப் பணிக்கோ, மேதைமைக்கோ அல்ல. இன்றளவும் அவ்வாறே அறியப்படுவது, அப்பெண்ணுக்கு சமூகம் இழைத்திருக்கும் அநீதி.

பாரிஸ் நகரில் வசித்த லூயி நிக்கொலாய் என்ற சிறு நிலப்பிரபுவுக்கும் அவர் மனைவி கபிரியேல் ஆன் தி ஃப்ரோல்லே

என்பவருக்கும் மகளாக 17 டிசம்பர் 1706 அன்று பிறந்தார் எமிலி. பிரெஞ்சு மன்னன் பதினாறாம் லூயி அரசவையில் இடைநிலைப் பதவி வகித்தார் லூயி நிக்கொலாய். தூரினிலும் பாரிசிலும் அவருக்கு நிலங்கள் இருந்தன. பாரிஸில் தோட்டங்களுக்கு அருகே பெரிய வீடொன்றில் நிக்கொலாய் குடும்பம் வசித்தது. நிக்கொலாய் தன் மகளுக்கு கணிதம், அறிவியல், இலக்கியம் போன்றவற்றைக் கற்பிக்க ஆசிரியர்களை ஏற்பாடு செய்தார். தாயார் கபிரியேல் ஆனும் இதை ஊக்குவித்தார். வாள் சண்டை, குதிரையேற்றம் என அந்தக் காலத்தில் நிலப்பிரபுத்துவக் குடும்பப் பெண்கள் கற்றுக்கொள்ளத் துணியாத பல விஷயங்களை எமிலி கற்றுக்கொண்டார். அருமையாக ஆடவும், பாடவும் தெரிந்தவர். சிறு வயது முதலே புத்தகங்கள் வாசிப்பதில் ஆர்வம் காட்டினார். எமிலியை மொழிகளின் காதலி எனச் சொல்லலாம். லத்தீன், இத்தாலி, கிரேக்கம், ஜெர்மன் உள்ளிட்ட மொழிகளை ஆசிரியர்கள் மூலம் கற்றவர், பின்னாளில் வோல்டேருடன் நட்பாகயிருந்தபோது, மூன்றே மாதங்களில் ஆங்கிலமும் கற்றுக்கொண்டார். ஆனாலும் அவருக்கு கணிதத்திலும் மெய்யியலிலும்தான் ஆர்வம் அதிகமிருந்தது.

1725–ம் ஆண்டு மார்க்விஸ் புளாரன்ட் கிளாடு து சலே லொமொந்து என்பவருடன் எமிலியின் திருமணம் நடந்தது. அப்போது அவருக்கு வயது 18, கணவருக்கோ 34. அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. லொமொந்து பிரெஞ்சுப் படையில் பணியாற்றிவந்ததால், பெரும்பாலும் எமிலி தனித்து விடப்பட்டார். குழந்தைகள் மூவரையும் ஓரளவுக்கு வளர்த்தபின் தன் அறிவுத் தேடலைத் தொடர எமிலி ஆசைகொண்டார்.



அப்போதைய சூழலில் அறிவியல் விவாதங்கள் பெரும்பாலும் பாரிஸின் அகாதமி தெ சயின்ஸ் மையத்தில் நடைபெற்றன. அங்கு பெண்களுக்கு அனுமதி இல்லை. அன்றைய பிரெஞ்சு மேட்டுக்குடிச் சமூகத்தில் பெண்கள் பல ஆண்களுடன் காதல் கொள்வதும் கூடி வாழ்வதும் அன்றாடங்களில் ஒன்றாக இருந்தது. அப்படியான சில காதலர்களும் எமிலிக்கு இருந்தனர் எனச் சொல்லப்படுகிறது. அவர்களில் முக்கியமானவர், கணிதவியலாளர் மாபெர்துயி (Maupertuis). எமிலிக்கு கணிதம் கற்றுத்தந்த ஆசிரியர் என மாபெர்துயி சுட்டப்படுகிறார். உண்மையில் எமிலி கொண்டது மாபெர்துயி மேலான காதலா அல்லது கணிதத்தின் மேலான ஆர்வமா என்பது புதிர்தான்.

1734–ம் ஆண்டு கஃபே கிராதத் என்ற கேளிக்கை கூடத்தில் மாபெர்துயியை சந்திக்க எமிலி முயன்றார். அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அப்போது வானியலாளர்கள், இயற்பியலாளர்கள், கணிதவியலாளர்கள் கூடிப் பேசும் பிரபல கஃபேயாக கிராதத் இருந்தது. மணிக்கணக்கில் அங்கு அவர்கள் விவாதிப்பதை அறிந்து, அந்த விவாதங்களில் கலந்துகொள்ள விரும்பினார் எமிலி. ஆணைப் போல ஆடையணிந்து அங்கு நுழைந்தார். அவரை யாரும் அடையாளம் காணவில்லை, மரியாதை தந்து உணவு பரிமாறினர். யாரையும் ஏளனம் செய்யும் நோக்குடன் இதை எமிலி செய்யவில்லை. பெண்களுக்கு அனுமதியில்லை என்ற சட்டம் எத்தனை பிற்போக்குத்தனமானது என்பதை நிறுவவே அவர் அப்படிச் சென்றார்.

வோல்டேரை சிறுவயதிலேயே தந்தை வீட்டின் விருந்துகளில் எமிலி சந்தித்திருந்தார். அவர்கள் வீட்டுக்கு வருகைதந்த பல மேதைகளில் வோல்டேரும் ஒருவர், அவ்வளவே. ஆனால் எமிலியின் மூன்றாவது குழந்தை பிறந்த பிறகு அவர் சென்ற விருந்து ஒன்றில் வோல்டேர் மீண்டும் ‘அறிமுகம்’ ஆனார். எமிலி, அவரை வெகுவாகக் கவர்ந்தார். எமிலி குறித்து பின்னாளில் எழுதிய

வோல்டேர், '1733–ம் ஆண்டு என்னைப் போலவே ஒத்த கருத்துடைய இளம்பெண் ஒருவர் பிரான்சின் ஒதுக்குப்புறமான கிராமம் ஒன்றில் என்னுடன் தங்கி கல்வி பெறவும், என்னுடன் சேர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளவும் விரும்புவதாகக் கூறியிருக்கிறார். பிரான்ஸ் நாட்டில் அவரைப் போல எல்லா அறிவியல் படிப்புகளிலும் ஆர்வமும் கூர்மையுமுள்ள பெண் வேறு எவருமில்லை. இத்தனை அழகிய மனமும் தெளிவும் கொண்ட கல்வியின்மேல் ஆர்வம் கொண்ட பெண்ணை நான் கண்டதில்லை. ஆனால் அந்த வயதுக்கும் பாலினத்துக்கும் உரிய விளையாட்டும் வேடிக்கையும் அவளுக்கு இருந்தது. ஆனால் இவை எல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டுப் பழைய வீடொன்றில் குடியேறினாள். அதைத் தன் திறமையால் அழகாக்கினாள்; தோட்டங்களை உருவாக்கினாள். நான் அவ்வீட்டில் காட்சியரங்கம் ஒன்றை என்னிடமுள்ள கருவிகளைக் கொண்டு ஏற்படுத்தினேன். அவ்வீட்டில் நூலகம் ஒன்றையும் நாங்கள் அமைத்தோம்' எனச் சொல்லியிருக்கிறார்.

இங்கிலாந்துக்குச் சென்று திரும்பிய வோல்டேர், இங்கிலாந்தையும் அதன் சமூகச் சூழலையும் புகழ்ந்து கட்டுரைகள் எழுதி, பிரெஞ்சு அரசரின் கடும் கோபத்தைச் சம்பாதித்திருந்தார். முடியரசிடம் மோதல் போக்கைத் தவிர்க்கவே பிரான்சின் உள்ளடங்கிய பகுதியில் இருந்த எமிலியின் வீட்டுக்குச் சென்றார். அவருடன் எமிலி செல்ல, எமிலியின் கணவர் எந்தத் தடையும் சொல்லவில்லை. அந்த வீட்டைச் செப்பனிடுவதற்கும் கவனித்துக்கொள்ளவும் பெருமளவு பணம் செலவு செய்ததையும் அவர் மறுக்கவில்லை.

இங்கே தங்கி கணிதம், அறிவியல், மெய்யியல் கோட்பாடுகள் பற்றிய ஆய்வுகளில் இருவரும் ஈடுபட்டனர். குறிப்பாக கணிதவியலாளர் மற்றும் மெய்யியலாளர் லீப்னிஸ், வுல்ஃப் மற்றும் நியூட்டனின் நூல்களை இருவரும் வாசித்து விவாதித்தனர். லீப்னிஸின் கோட்பாடுகளை முதலில் படித்தவர் எமிலிதான் என வோல்டேர் தன் நூலில் எழுதியிருக்கிறார். லீப்னிஸின் தத்துவத்தால் ஈர்க்கப்பட்டு எமிலி எழுதிய நூல் 'இன்ஸ்டிட்யூஷன்ஸ் தி ஃபிசிக்' (Institutions de Physique). அவரது ஒளியியல் ஆய்வுக்கட்டுரை 'Essai sur l'optique' பின்னாளில் கிடைத்தது. அவரும் வோல்டேரும் இணைந்து 1738–ம் ஆண்டு எழுதிய 'Elements de la philosophie de Newton' நூல் நியூட்டனின் தத்துவவியல் கோட்பாடுகளை எளிய மனிதர்களும் புரிந்துகொள்ளும் வகையில் அமைந்தது.

மாண்டெவில்லின் தேனீக் கதைகள் (Fable of the Bees) நூலைப் பிரெஞ்சு மொழிக்கு எமிலி மொழிபெயர்த்தார். அதில் அங்கங்கே அவரது 'டச்' விட்டுச் சென்றுள்ளார். அந்நூலுக்கு எழுதிய முன்னுரையில், பெண்களுக்கு எதிராக அன்று நிலவிய ஆதிக்கச் சூழலை எமிலி அடித்து நொறுக்குகிறார். 'பெண்கள் அறிவியல் கல்வி பெறக்கூடாது எனத் தங்கள் முழு வலிமையையும் மொத்த உலகமும் திரட்டிச் சொல்கிறது. ஆனால் அந்த அறிவைக் கொண்டு முடிவுகள் எடுத்து அரசாட்சி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறது எவ்வளவு பெரிய நகைமுரண்' எனக் கேள்வி எழுப்புகிறார்.

பல நூற்றாண்டு காலமாக ஒரு நல்ல கவிதையோ, கதையோ, ஓவியமோ, இயற்பியல் நூலோ ஏன் பெண் ஒருவரால் உருவாக்கப்படவில்லை என வாசகர்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுச் சுயபரிசோதனை செய்துகொள்ளுமாறு எமிலி வேண்டுகோள் விடுக்கிறார். 'பல பெண்கள் தங்களுக்கு இக்கேள்வி எழுந்தாலும் அச்சத்தாலும் அறிவுடன் இயைந்த துணிவு இல்லாத காரணத்தாலும் அமைதி காக்கின்றனர்' என அந்த முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

1748–ம் ஆண்டு நியூட்டனின் பிரின்சிபியா நூலை மொழிபெயர்க்கும்போது மீண்டும் காதல்வயப்பட்டார் எமிலி. அவரது காதலர், பிரெஞ்சுக் கவிஞர் ழான் பிராங்காய் தெ செயின் லாம்பர்து ஆவார். அந்த நேரத்தில் தன் கணவரால் கர்ப்பமுற்ற எமிலிக்குத் தன் முடிவு நெருங்குவது போல் தோன்ற, அவசர அவசரமாக அந்நூலை மொழிபெயர்த்தார். தன் ஒன்பது வயது மகனுக்கு இயற்பியல் கற்றுத்தரும் பொருட்டே அவர் இந்நூலைப் படைத்ததாகச் சொல்லப்படுகிறது. அழகிய பெண் குழந்தையைப் பிரசவித்த எமிலி, 10 செப்டம்பர் 1749 அன்று காய்ச்சல் கண்டு இறந்துபோனார். ஆனால் அதற்குள் தன் நூலை எழுதி முடித்திருந்தார்.

எமிலியின் மரணத்தால் வோல்டேர் உடைந்துபோனார். எமிலி மொழிபெயர்த்த நியூட்டனின் பிரின்சிபியா நூலைப் பதிப்பித்து வெளியிட்ட வோல்டேர், அதன் முன்னுரையில் எமிலிக்கு அழகிய அஞ்சலி ஒன்றைச் செய்தார். 'யாரிடம் கற்றுக் கொள்ளமுடியும் என்று நினைத்தாளோ அவர்களிடம் மட்டுமே அவள் அறிவியலைப் பற்றிப் பேசினாள். தன்னைச் சுற்றி மனப் போராட்டங்களை நடத்தி தங்களுக்குள் நீதிமன்றங்கள் அமைத்து அவளைத் தீர்ப்பிட்ட வட்டங்களை அவள் கண்டுகொள்ளவில்லை. இவ்வளவு ஆழமும் கடின உழைப்பும் தேவைப்படும் ஒரு பணியை ஒரு பெண் ஆற்றியிருப்பது இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது.'

**– நிவேதிதா லூயிஸ்**







# அகரம் பொங்கல்!

அகரம் தன்னார்வலர்கள் மாதம் ஒருமுறை சந்தித்து, எதிர்காலத் திட்டங்கள் குறித்து உரையாடுவார்கள். ஜனவரி மாதச் சந்திப்பு ஜனவரி 8–ம் தேதி நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது பொங்கல் திருவிழா கொண்டாட்டம் நடைபெற்றது. 50 தன்னார்வலர்கள், அகரம் முன்னாள் மாணவர்கள் 30 பேர் இதில் கலந்து கொண்டார்கள். சென்னை வளசரவாக்கத்தில் இருக்கும் அகரம் பயிற்சி மையத்தில் நடைபெற்ற பொங்கல் கொண்டாட்டத்தில் அகரம் கலைக்குழுவினரின் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் முதலில் நிகழ்த்தப்பட்டன. இதைத் தொடர்ந்து உரி அடித்தல், கோலப்போட்டி போன்றவை நடைபெற்றன. பிறகு தன்னார்வலர்களும் முன்னாள் மாணவர்களும் இணைந்து பொங்கல் வைத்தனர்.

# பசுமைப் பத்திரம்...

## இது சூழலுக்கு ஏற்ற முதலீடு!




இந்தியாவிலேயே முதல்முறையாக ரிசர்வ் வங்கி சார்பில் பசுமைப் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை ஆர்வமாக எல்லோரும் வாங்கியிருக்கிறார்கள் என்பதுதான் சிறப்பு. அது என்ன பசுமைப் பத்திரம்?

பொதுமக்களிடமிருந்தும் சந்தையிலிருந்தும் கடன் திரட்டுவதற்காக அரசு அவ்வப்போது கடன் பத்திரங்களை வெளியிடும். வங்கி முதலீடு போன்றவற்றைவிடக் கடன் பத்திரங்கள் அதிக வட்டியை ஈட்டித் தரும் என்பதால், மக்கள் இவற்றில் ஆர்வத்துடன் முதலீடு செய்வார்கள். இந்தக் கடன் பத்திரங்கள் ஐந்து ஆண்டு அல்லது பத்து ஆண்டு கழித்து முதிர்வடையும். அப்போது வட்டியுடன் சேர்த்துப் பணம் திரும்பக் கிடைக்கும். மத்திய அரசு மட்டுமின்றி, மாநில போக்குவரத்துக் கழகம், மின் வாரியம் ஆகியவை சார்பிலும் இப்படி வெளியிடப்படும் கடன் பத்திரங்களுக்கு நல்ல வரவேற்பு உண்டு.

இந்தக் கடன் பத்திரங்களின் ஓர் அங்கமாக இந்த ஆண்டு முதல்முறையாகப் பசுமைப் பத்திரங்களை வெளியிடுவதாக மத்திய அரசு கடந்த 2022 பட்ஜெட்டில் அறிவித்தது. மத்திய அரசு இந்த நிதியாண்டில் மார்க்கெட்டில் திரட்டுகிற ரூ.14.21 லட்சம் கோடி கடனில் சிறுதுளியாக, இந்த 16 ஆயிரம் கோடி சிறு துளிதான். அதில் 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கான பசுமைக் கடன் பத்திரங்கள் ஜனவரி இறுதியில் வெளியிடப்பட்டு, உடனே வாங்கப்பட்டுவிட்டன. விரைவில் மீதி 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கான பசுமைக் கடன் பத்திரங்கள் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படும்.

வழக்கமான கடன் பத்திரங்களைவிட இவற்றுக்கு வட்டி சிறிது குறைவுதான் என்றாலும், இவற்றில் முதலீடு செய்பவர்களுக்குத் தாங்கள் பசுமைப் பணிகளுக்காக முதலீடு செய்கிறோம் என்ற ஆத்ம திருப்தி கிடைக்கும். முதிர்வுத்தொகைக்கு வட்டி இல்லை என்பது கூடுதல் சிறப்பு.

சூழலுக்கு ஏற்ற பசுமை வீடு கட்டும் திட்டங்கள், காற்றாலை மின்சார உற்பத்தி, பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவது, சூழலைப் பாதிக்காத தூய எரிசக்தித் திட்டங்கள், மாசுக் கட்டுப்பாடுப் பணிகள் போன்றவற்றில் இந்த நிதியை அரசு முதலீடு செய்யும்.

காலநிலை மாற்றத்தைச் சூழல் அக்கறையுடன் எதிர்கொள்ளும் ஒரு முயற்சியாக இந்தப் பசுமைப் பத்திரங்கள் கருதப்படுகின்றன. ஐ.நா., சபையின்



ஓர் அங்கமான The Intergovernmental Panel on Climate Change (IPCC) என்ற அமைப்பு, கடந்த 2007–ம் ஆண்டு ஓர் அறிக்கை வெளியிட்டது. 'புவி வெப்பமயமாதலுக்கு மனிதர்களின் அலட்சியமான நடவடிக்கைகளே காரணம். காலநிலை மாற்றத்தால் இந்த உலகம் சந்திக்க இருக்கும் பொருளாதார விளைவுகளும் சமூக விளைவுகளும் மோசமானவை' என்று எச்சரித்தது அந்த அறிக்கை. ஸ்வீடன் நாட்டின் பென்ஷன் திட்டத்தை நிர்வகிக்கும் அமைப்பிடம் மிகப்பெரிய தொகை இருக்கிறது. அது உலகம் முழுக்கப் பாதுகாப்பான முதலீட்டுத் திட்டங்களில் தன் நிதியை முதலீடு செய்கிறது. 'சுற்றுச்சூழலுக்கு உகந்த முதலீட்டுத் திட்டங்களில் நாங்கள் முதலீடு செய்யத் தயார்' என்று அந்த பென்ஷன் அமைப்பு அறிவித்தது. அதைத் தொடர்ந்து 2008 நவம்பரில் உலக வங்கி முதன்முதலாகப் பசுமைப் பத்திரங்களை வெளியிட்டது. அதன்மூலம் திரட்டப்பட்ட நிதியை, சூழலுக்கு உகந்த திட்டங்களுக்குக் கடனாகக் கொடுத்தது. இப்போதுவரை உலக வங்கியே பசுமைப் பத்திரங்களை வெளியிடுவதில் முன்னணியில் இருக்கிறது. கடந்த 15 ஆண்டுகளில் சுமார் 14.4 பில்லியன் அமெரிக்க டாலரைப் பசுமைப் பத்திரங்கள் மூலம் திரட்டி, உலகம் முழுக்க 11 திட்டங்களுக்குக் கடன் அளித்துள்ளது உலக வங்கி. இவற்றில் பெரும்பாலானவை மரபுசாரா எரிசக்தி, விவசாயம் மற்றும் சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத போக்குவரத்துத் திட்டங்களே!

பல நிறுவனங்களும், வங்கிகளும், நாடுகளும் இப்போது இந்த முறையைப் பின்பற்றத் தொடங்கிவிட்டன. கடந்த 2022 வரை 25 நாடுகளின் அரசாங்கங்கள் இந்தப் பட்டியலில் இணைந்திருந்தன. இப்போது இந்தியாவும் இணைந்துள்ளது.

இந்தியாவில் மத்திய அரசு சார்பில் பசுமைக் கடன் பத்திரம் வெளியிடுவது இதுதான் முதல்முறை என்றாலும், தனியார் துறையில் ஏற்கனவே நடைமுறைக்கு வந்துவிட்டது. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு YES வங்கி இதை முதலில் வெளியிட்டது. இதில் வந்த பணத்தைச் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின் திட்டங்களுக்கு மட்டும் கடனாகக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து பல தனியார் வங்கிகள், அரசு வங்கிகள் இப்படி பத்திரங்களை வெளியிட்டன.

போலந்து நாட்டில் செய்யப்பட்ட ஓர் ஆய்வின்படி, பசுமைப் பத்திரங்கள் புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கின்றன. இதுவரை எந்த முதலீட்டுத் திட்டத்திலும் சேராத பலர், பாதுகாப்பான அரசுக் கடன் பத்திரங்களைக்கூட வாங்காத பலர், புதிதாக வந்து இவற்றை வாங்குகின்றனர். 'நான் முதலீடு செய்து லாபம் சம்பாதிப்பதைத் தாண்டி, சுற்றுச்சூழலுக்காகச் சேவை செய்கிறேன்' என்ற உணர்வே இவர்களை முதலீடு செய்யத் தூண்டுகிறது. நிதி இல்லாத காரணத்தால் பசுமைத் திட்டங்களை அரசோ, தனியார் நிறுவனங்களோ செயல்படுத்த முடியாமல் தவிக்கும்போது, பசுமைக் கடன் பத்திரங்கள் மூலம் திரட்டப்படும் நிதி அவர்களுக்குக் கைகொடுக்கிறது. அதன்மூலம் புவிக்கு நன்மை நிகழ்கிறது. ●



# நம்பிக்கையை உருவாக்குவோம்!



நான்கு வயதுக் குழந்தைக்கு உணவுத்தட்டில் நிறைய கேரட்டை வைத்துச் சாப்பிடச் சொன்னார் அம்மா. “எப்பவும் இதையே தர்றீங்களே? எனக்குப் பிடிக்கலை” என்று சிணுங்கியது குழந்தை. “அப்படிச் சொல்லாதே, கேரட் உன்னை இருட்டிலும் நல்லா பார்க்க வைக்கும்” என்று சொன்னார் அம்மா.

உடனே குழந்தை தட்டிலிருந்து ஒரு கேரட்டை எடுத்தது. அதை அழுத்தி அழுத்திப் பார்த்தது. “இல்லம்மா, டார்ச் லைட்டை அழுத்தினா பல்பு எரியும். அதை வச்சு இருட்டில் நல்லா பார்க்க முடியும். கேரட்ல அப்படி எந்த வெளிச்சமும் வரலையே” என்றது.

கேரட் கண்பார்வையை மேம்படுத்தும் என்று அதன் மருத்துவக் குணங்களைக் குழந்தை நம்புகிற மாதிரி சொல்லியிருக்க வேண்டும், குழந்தை சாப்பிடுகிற மாதிரி கேரட்டை வித்தியாசமாகச் சமைத்துத் தந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தார் அம்மா.

ஒரு பள்ளிக்கூடம். புதிதாக அங்கு பொறுப்பேற்றுக்கொண்டார் தலைமை ஆசிரியர். அதன்பின் பள்ளிக்கூடத்தைச் சுற்றிப் பார்த்தார். அன்றுதான் எல்லா மாணவர்களுக்கும் கொடுப்பதற்கு பாடப் புத்தகங்கள் வந்திருந்தன. வகுப்பறை ஒன்று தற்காலிக ஸ்டோர் ரூமாக மாறியிருக்க, அங்கு பாடப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வகுப்பு ஆசிரியர்களும் உள்ளே போய், தங்கள் மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களைச் சில மாணவர்களின் உதவியுடன் அள்ளி எடுத்துக்கொண்டு போனார்கள்.

இதைப் பார்த்த தலைமை ஆசிரியர் அதிர்ச்சியாகிவிட்டார். “என்ன இது? நான் ஏற்கனவே இருந்த பள்ளியில் இப்படி எல்லோரையும் உள்ளே விட மாட்டேன். வாசலில் ஒரு நோட்டு வைத்து, எத்தனை புத்தகங்களை எடுத்துப் போகிறோம் என்று அதில் என் முன்னிலையில் ஆசிரியர்கள் எழுத வேண்டும். அதன்பின் நான்தான் எடுத்துக் கொடுப்பேன். இங்கே எல்லோரும் போய் இஷ்டத்துக்கு எடுக்கிறார்கள். தொலைந்துவிடாதா?” என்று கேட்டார்.

அவருடன் வந்த உதவித் தலைமை ஆசிரியர் சிரித்தபடி, “மாணவர்கள்தான் ஒரு பள்ளியில் பெரிய பொக்கிஷங்கள். அவர்களையே ஆசிரியர்களின் பொறுப்பில்தான் விடுகிறோம். இவை புத்தகங்கள்தானே, அதெல்லாம் தொலையாமல் பார்த்துக்கொள்வார்கள், நம்புங்கள்” என்றார்.


ஒரு ஷாப்பிங் மால். வெளியே கார் நிறுத்தும் இடத்தில் குழப்பத்துடன் பார்த்த ஒரு முதியவர், “என் காரை யாரோ திருடிவிட்டார்கள்” என்று செக்யூரிட்டியிடம் புகார் செய்தார். “நீங்க எங்கே நிறுத்தியிருந்தீங்க?” என்று செக்யூரிட்டி கேட்டார். “வாசல் வழியே உள்ளே வந்ததும், இடது பக்கம் திருப்பி நிறுத்தினேன்” என்றார் முதியவர்.

“இந்த ஷாப்பிங் மாலுக்கு மூன்று வழிகள் இருக்கு. நீங்க எந்த வழியா வந்தீங்கன்னு சொல்ல முடியுமா?” என்று செக்யூரிட்டி கேட்க, “நான் இந்த வழியா வந்து இங்கேதான் நிறுத்தினேன்” என்று தான் நின்றிருந்த இடத்தைக் காட்டினார் முதியவர்.


செக்யூரிட்டி அவரிடம் விவரங்களைக் கேட்டுக்கொண்டு போய்த் தேட, இன்னொரு வாசலின் இடதுபக்கமாக நின்றிருந்தது கார். முதியவருக்கு ஞாபகமறதி என்பதைப் புரிந்துகொண்ட செக்யூரிட்டி, அவரை கூட்டிப் போய் காரைக் காட்டினார். “சாவி என்கிட்டதான் இருக்கு. அப்புறம் யார் என் காரை அங்கேயிருந்து இங்கே எடுத்து வந்து நிறுத்தியிருப்பாங்க” என்று சண்டை போட்டுவிட்டுப் போனார் முதியவர்.



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


திருக்குறள் 100
வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்
சிவகுமார்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication 1st week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month.







மதிப்பிற்குரியவர்களுக்கு...

RAMRAJ ©

காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in

கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்

**Follow us** RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia


If undelivered
please return to

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801